# இலங்கையில் விசேட தேவையுடையவர்களை சமூகத்தில் வலுவூட்டுதல் தொடர்பான தேசிய செயலகத்தின் கடமைகளை மதிப்பாய்வு செய்தல்





ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

| பந்தி இலக்கம் | உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| ------------- | --------------------- | ---------------- |
| 1. | நிறைவேற்று பொழிப்புரை | 03 |
| 2. | அறிமுகம் | 05 |
| 2.1 | சமூக வலுவூட்டல் அமைச்சினது பணிகள் | 06 |
| 2.2 | கணக்காய்விற்கான தலைப்பைத் தெரிவு செய்தல் | 12 |
| 2.3 | கணக்காய்வின் நோக்கம் | 12 |
| 2.4 | கணக்காய்வின் நோக்கெல்லை | 14 |
| 2.5 | தொடர்பாடல் நிறுவனங்களும் கடமைகளும் | 14 |
| 2.6 | கணக்காய்விற்கான அதிகாரம் | 17 |
| 2.7 | கணக்காய்வுப் பிரவேசம் | 17 |
| 3. | விரிவான கணக்காய்வுக் களம் | 18 |
| 3.1 | விசேட தேவையுடையவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சூழலை உருவாக்குதல் | 18 |
| 3.2 | அங்கவீனர்களுக்கென அமுலாகும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் | 21 |
| 3.3 | விசேட தேவையுடையவர்களுக்குகென அமுலாகும் நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றல் மட்டம் | 34 |
| 4. | பரிந்துரை | 36 |
| 5. | இணைப்பு | 38 |

**நிறைவேற்று பொழிப்புரை**

-------------------------------------------

உலகில் வாழும் சகல மனிதர்களும் ஆத்ம அபிமானத்துடன் வாழ்வதையே எதிர்பார்க்கின்றனர். அந் நிலைமையை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தேவையான சட்டங்களையும் விதிகளையும் தயாரித்து, அவதிக்குள்ளானோருக்கும் சம நிலைமையை உருவாக்கிக் கொடுத்து சமூக சம நிலைமையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கின்றது. அதற்கமைய, சமூகத்தில் வாழும் பல்வேறு சரீர மற்றும் மன வசதியற்று அவதியுறும் மக்களின் பொருட்டு அரசாங்கம் சலுகைகளை வழங்குகின்றது. அதற்கமைய, இலங்கையில் அங்கவீனர்களது உரிமைகளை மேம்படுத்தல், தீவிரமாக அபிவிருத்தி செய்தல், பாதுகாத்தல் தொடர்பாகவும் அதற்கு இணைவான விடயங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கு 1996 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க அங்கவீனர் உரிமைப் பாதுகாப்பு அதிகாரச் சட்டம் உருவாக்கப்பட்டது.

இந்த அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கடமைகளின் கீழ் அங்கவீனர்களும் சமூக பிரசைகளுக்கிடையே சமமாக வாழ்வதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குவதற்கான கடப்பாடு உள்ளது. அதற்கமைய, குறைந்த வருமானத்தை ஈட்டும் விசேட தேவையுடையவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு உதவி வழங்குதல், உதவி உபகரணங்களை வழங்குதல், மாதாந்தப் படி வழங்குதல், சுய வேலை வாய்ப்புக்கு உதவி அளித்தல், மருத்துவ உதவி வழங்குதல், கல்விக்கான உதவி வழங்குதல் மற்றும் 16 முதல் 35 வயதுடைய அங்கவீனர்களுக்கு விடுதிகளில் தங்கியிருந்து தொழில்சார் பயிற்சிக் கற்கை நெறிகளில் ஈடுபடுவதற்குத் தேவையான வசதியை வழங்குதல் எனும் பிரதான பணிகள் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் என்பவற்றின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

அரசாங்கத்தினால் அங்கவீனருக்கான தேசிய செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தால் வருடாந்தம் வழங்கப்படும் நிதியேற்பாட்டின் மூலம் பெறும் உதவி மற்றும் வசதி என்பவற்றால் அம்மக்கள் சமூகத்தில் எந்தளவிற்கு வலுவூட்டப்படுகின்றனர் என்பதை மதிப்பாய்வு செய்வதே இக் கணக்காய்வு அறிக்கையின் நோக்கமாகும். இக் கணக்காய்வின் மூலம் இலங்கையில் குறைந்த வருவாயைப் பெறும் அங்கவீனர்கள் தொடர்பான தரவு முறைமை ஒன்று இதுவரை பேணப்படாதிருப்பதும் அங்கவீனர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவி உபகரணங்கள் நடமாடும் சேவை வாயிலாக வழங்கப்படுவதால் அவை நியாயமாக வழங்கப்படாதிருப்பதும் வீடுகளை உதவியாக வழங்குவது அநேக ஆண்டுகளாகத் தாமதமாகி இருப்பதன் காரணமாக வீடுகளை அமைப்பது இடை நடுவே கைவிடப்பட்டிருப்பதும் சுய வேலை வாய்ப்புடன் தொழில்சார் பயிற்சி வழங்கப்படாமையால் அத் தொழில்கள் இடை

நடுவே கைவிடப்பட்டுள்ளமையும் போன்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவை தொடர்பான விரிவான விடயங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

மேலும், காது கேட்பதில் குறைபாடுகள் உள்ள நபர்களுக்குத் தேவையானவற்றை சமர்ப்பிக்கும்போது சமிக்ஞை பாஷையை அவர்களுக்கு விளக்குவதற்கு பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக இருப்பதும் நுழைவு வசதி தொடர்பாகக் கவனம் செலுத்துவதானது குறைந்தளவில் இருப்பதும் கல்வி வசதிகளை வழங்குவது தொடர்பாக பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல் குறைவடைந்துள்ளமையும் போன்ற குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

அங்கவீனர்களை இனங்காண்பதும் அந் நபர்களுக்கு ஆறுதலளிப்பதும் போன்ற விடயங்கள் இரண்டையும் நிறைவேற்றுவதற்கு சமூக சேவைகள் திணைக்களம் பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சமூக சேவை உத்தியோகத்தரை நியமித்துள்ளது. தீவடங்கிலும் 25 மாவட்டங்களில் 331 பிரதேச செயலகங்கள் உள்ளன. இப் பணியை நிறைவேற்றும்போது இந்த உத்தியோகத்தர்கள் பல்வேறு இடர்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. அத்துடன் அவர்களது பணிகள் தொடர் நடவடிக்கைக்குள்ளாவது பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டிருப்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

2017 தொடக்கம் 2021 வரை மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் மேம்படுத்தவதற்கான தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாகவும் இதுவரை போதிய நடவடிக்கை எடுக்கப்படாதுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 2. அறிமுகம்

----------------

இலங்கையில் அங்கவீனம் தொடர்பான சட்டபூர்வ பகுப்பாய்வானது அங்கவீனர்களது உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான அதிகாரச் சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. ''அங்கவீனர் எனப்படுபவர், சகஜமாக உண்டாகிய, சரீர ஆற்றலின் மற்றும் மன ஆற்றலின் ஏதேவொரு குறைபாடு காரணமாக வாழ்க்கையின் தேவைகளை முற்றாகவோ அல்லது பகுதியளவிலோ தம்மாலோ அல்லது தமக்காகவோ நிறைவேற்றிக் கொள்ள முடியாத ஒருவர் ஆவார்'' என்பது கருத்தாகும்.

சகல மனிதர்களும் சுதந்திரமாகவே பிறப்பை எய்துவதுடன், அபிமானத்திலும் உரிமையிலும் சம பங்குடையவர் ஆவர். அவர்கள் தர்க்க மற்றும் மனச்சாட்சி உள்ளவர்களாக இருப்பதுடன் சகோதரப் பாங்குடன் ஒவ்வொருவரும் இருத்தல் வேண்டும் என 1948 டிசெம்பர் 10 ஆந் திகதிய மனித உரிமைகள் தொடர்பான உலகப் பிரகடனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சமுதாயத்தினரிடையே அங்கவீனர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனர்களைப் பாதுகாப்பதற்கான அதிகாரச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சமூக வலுப்படுத்தல் அமைச்சின் கீழ் வரும் அங்கவீனருக்கான தேசிய செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் என்பன இதனை அமுலாக்க உதவுபவையாக இனங்காட்டப்பட்டுள்ளன.

அங்கவீனம் தொடர்பான தேசிய கொள்கையின் வாயிலாக சமூக நியாயத்தின் பெயரில் அங்கவீனர்களது உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் என்பன நடைபெறுகின்றன. பரிபூரணமானதும் திருப்தியளிப்பதுமான வாழ்க்கை வாழ்வதன் மூலம் இலங்கையில் சமமான பிரசையாக தமது அறிவு, அனுபவம், விசேட நிபுணத்துவம் மீதான ஆற்றலை தேசிய அபிவிருத்திக்கென பங்கிடும் சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைத்துள்ளது.

அங்கவீனர்கள் மற்றும் அவர்களது அமைப்பு மற்றும் பெற்றோரது அமைப்பு என்பவற்றை வலுவூட்டுதல் இக் கொள்கையின் பிரதான மூல தர்மமாகும். அது ஆக்கபூர்வமாக செயற்படுத்தப்படும்போது அதற்கு மூலமாக அமைவது வலுவூட்டல் ஆகும்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துதல் என்பவற்றிற்கான தேசிய செயலக நடவடிக்கைத் திட்டத்தில் (2017 - 2021) இலங்கையில் அங்கவீனர்கள் தொடர்பான பிரதான பணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி அவற்றிற்கான அரச நிறுவனங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கமைய, அங்கவீனர்களுக்கான பின்வரும் பணிகளை

நிறைவேற்றுவதற்கான பொறுப்பும், சமூக வலுவூட்டல் அமைச்சிற்குரிய கடமைகளும் பின்வரும் பந்திகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

## 2.1 சமூக வலுவூட்டல் அமைச்சினது பணிகள்

------------------------------------------------------------

கொள்கை ரீதியாக குறித்த அமைச்சினது பணிகள் பின்வருமாறு

### 2.1.1 சுயாதீனம் தொடர்பான உரிமை

-----------------------------------------------

சகல விசேட தேவையுடையவர்களதும் தனிப்பட்ட சுயாதீனம், தனித்துவம் மற்றும் பிரசாவுரிமைக்கு மதிப்பளித்தல் மற்றும் பங்குபற்றுதல், சுயமாகச் செயற்படுதல் மற்றும் தம் பொருட்டுக் கதைப்பதற்கு சுற்றாடலை உறுதி செய்து கொள்ளுதல், மன ரீதியான மற்றும் உடல் ரீதியான அங்கவீனர்களின் பொருட்டு நிர்மாணிக்கப்பட்ட மற்றும் அவர்களால் பயன்படுத்தப்படும் சகல சேவைகளையும் இனங்காண்பது.

### 2.1.2 போதியளவு வாழ்க்கை மட்டத்தையும் சமூக பாதுகாப்பையும் உறுதி செய்தல்

-----------------------------------------------------------------------------------------------------------------------

(அ) பிறருடன் சமமான அடிப்படையிலான பிரதான சுற்றோட்ட சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தினுள் விசேட தேவையுடையவர்களைப் பூரணமாக உட்புகுத்துவதன் பொருட்டான தகமைகளைக் கொண்ட விசேட தேவையுடையவர்களுக்கு சமூக பாதுகாப்பையும் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் மூலம் சமமான நலன்களையும் வழங்குவதற்கு பிரதேச மற்றும் மாவட்டச் செயலக வியூகத்தில் ஏற்பாடுகளைச் செய்தல்.

(ஆ) தற்போதுள்ள விசேட தேவையுடையவர்களுக்கு விசேடமாக உள்ள சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை சக்திமிக்கதாக்குவதன் பொருட்டு யோக்கியதை, ஏனைய பொது சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் காரணமாக மட்டுப்படுத்தப்படாதிருப்பதை சான்றுறுதிப்படுத்தியவாறு, விசேட தேவையுடையவர்களுக்கான யோக்கியதை நியமங்களை அபிவிருத்தி செய்து அவற்றைப் பிரசித்தப்படுத்தல்.

(இ) நபர் ஒருவரினது விருப்பு மற்றும் ஆர்வம் என்பவற்றிற்கு மதிப்பளித்து வீதியில் அல்லது நிரந்தர வசிப்பிடமின்றி வாழும் மனநலக் குறைவுடையோருக்கு உதவி மற்றும் சேவைகளை வழங்குதல்.

(ஈ) பொருளாதார அபிவிருத்தித் திட்டம் மற்றும் உபாய மார்க்கங்களை உள்ளடக்குவதற்கு அபிவிருத்திக் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் ஆக்கபூர்வ நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் பெறுபேறுகள் மற்றும் வரவு, செலவுத் திட்டம் என்பவற்றின் மூலம் விசேட தேவையுடையவர்களை சரிவர இனங்காண்பது.

### 2.1.3 சுகாதார பாதுகாப்புச் சேவை

---

(அ) அங்கவீனம் மற்றும் தொடர்புடைய சுகாதாரப் பாதுகாப்புத் தலையீடு என்பவற்றை முன் கூட்டியே இனங்காண்பதற்கு பிறப்பின்போதும் அதன் பின்னரும் உள்ள சுகாதாரப் பாதுகாப்பு என்பவற்றுக்கிடையேயான வித்தியாசத்தையும் குறைபாடுகளையும் இனங்காண்பதற்காக தற்போதைய மூல சுகாதார பாதுகாப்பு சேவையை மதிப்பாய்வு செய்தல்

(ஆ) பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சமூக அங்கவீனமுடைய நபர்கள் மற்றும் தொடர்புடைய சிவில் சமூக அமைப்புகளுடனான அறிவுரையுடன் வழிகாட்டிப் பிரசுரம் ஒன்றைத் தயாரித்து வெளியிடுதல்

* முன்கூட்டியே இனங்காண்பது / தீவிரமடையாது தவிர்த்துக் கொள்ளுதல்
* பங்குபற்றுதல் அதிகரித்துச் செல்லுதலும் உதவியும்
* பாதுகாப்பு அளிப்பவர்கள் மற்றும் சேவை வழங்குபவர்களுக்கு பயிற்சியளித்தல்
* தமக்கோ அல்லது பிறருக்கோ பாதிப்பு ஏற்படுவதிலிருந்து பாதுகாப்பைப் பெறுவதோடு இவற்றை சமப்படுத்தியவாறு தமது விருப்பில்லாது வழங்கப்படும் சிகிச்சைகளைக் குறைத்துக் கொள்ளுதல் உள்ளடங்கலான நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றினது கட்டுப்பாடு

(இ) குடும்பத்திற்கும் குடும்ப வாழ்க்கைக்கும் மதிப்பளிப்பது தொடர்பாக விசேட தேவைகளுடன் கூடிய இளைஞர்கள் மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குபவர்களை இலக்காகக் கொண்ட கல்வி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக தொடர்பாடல், விவாகம் மற்றும் தாய்மையடைதல் / தந்தையாகுதல் என்பவற்றை உள்ளடக்கிய விசேட தேவையுடையவர்களது உரிமைகள் வெளிப்படும் விதத்தில் அவர்களது விருப்பப்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆற்றலை வழங்குதலும்.

**2.1.4 நுழைவுக்கான ஆற்றலுடன் கூடிய நியாயமான சுற்றாடல், போக்குவரத்து, ஊடகம் மற்றும் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பம் என்பன.**

---

(அ) விசேட தேவையுடையவர்கள் பிறருடன் சமமான அடிப்படையில் அமைந்த வாழ்க்கையின் சகல சந்தர்ப்பங்களிலும் சுதந்திரமாகக் கலந்து கொள்ளுதல் மற்றும் அவர்களது சமூகத்தினருடன் சுதந்திரமாக வாழ்தல் என்பவற்றைச் சான்றுறுதிப்படுத்துவதற்கான சுற்றாடலை உருவமைத்தல்

2016 நுழைவுக்கான பிரமாணங்களில் குறிப்பிட்டுள்ளவை மற்றும் வழிகாட்டலை அமுலாக்குவதை ஒழுங்குபடுத்துதல், அவ்வாறான பிரமாணங்களைக் கடைப்பிடிக்காத அரசாங்க கட்டிட உரிமையாளர்களுக்கு எதிரான முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அமைப்பை ஏற்படுத்துதல்.

(ஆ) தகவல்களும் ஊடகங்களில் பிரவேசித்தலுக்குமான ஆற்றல்

---

- இலங்கை சமிக்ஞை மொழியை முறையாக ஏற்றுக் கொள்ளுதல், அதனைச் சட்டமாக்குதல் மற்றும் அதன் மேம்பாட்டை சான்றுறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்தால் விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- சமிக்ஞை மொழியை மொழி பெயர்ப்புச் செய்வதற்கான தேசிய சான்றிதழ் பத்திர நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்தல்.

- தொழில்சார் சான்றுறுதிப் பத்திரத்தையுடைய 100 சமிக்ஞை மொழி மொழி பெயர்ப்பாளர்களுக்கு டிப்ளோமா மட்டத்தில் பயிற்சியளித்தல்

- விசேட தேவையுடையவர்கள் அறிவைப் பெறும் விதத்தில் சகல அரச ஊடகங்களினதும் செய்தி ஒலிபரப்பினதும் குறைந்தது 50 சதவீத அச்சிடல் மற்றும் கட்புல ஊடகங்கள் மூலம், விசேட தேவையுடையவர்கள் அறிந்து கொள்வதற்கான ஆற்றலை ஏற்படும் விதத்தில் ஒலிபரப்புகளை மேற்கொள்ளுதல்.

- அரசாங்கம் பெறக்கூடிய தகவல்களையும் உபகார அடிப்படையில் விசேட தேவையுடையவர்களுக்கு வழங்கப்படக் கூடிய தகவல்களையும் வழங்குவதற்குத் தேவையான பிரேல் அச்சிடல், இலகுவாக வாசிப்பதற்கான மாதிரிகள், சமிக்ஞை மொழி மொழி பெயர்ப்பு,

சமிக்ஞை மொழி வீடியோ மற்றும் பிரேல் தகவல்களுக்கான பிரதிகளைப் பெறுவதுடன் உற்பத்திச் சேவையை அபிவிருத்தி செய்தலும்.

(இ) உதவி மற்றும் பயன்படுத்தக் கூடிய தொழில்நுட்பத்தில் நுழைவதற்கு இயலுமாதல்

- கேட்கும் மற்றும் பார்க்கும் குறைபாடுகளுடனான விசேட தேவையுடையவர்கள் பயன்படுத்துவதற்கெனத் தயாரிக்கப்பட்ட ஊடகத் துணைப்பாகங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஆற்றலை அதிகரிப்பதற்குச் சலுகை அளித்தலும் வரியற்ற திட்டத்தை அறிமுகம் செய்தலும்.

**2.1.5 நியாயத்திற்கான பிரவேசம்**

**------------------------------------------**

(அ) விசேட தேவையுடையவர்கள் நியாயத்தைக் கோருவதற்கு இடமுண்டு. (உதாரணமாக, பொலிசில் முறைப்பாடு செய்தல், சட்டபூர்வ நடவடிக்கைகளில் பங்குபற்றுதல், நீதித்துறை நிறுவனங்கள், மற்றும் நீதிமன்றங்களுக்குச் செல்லுதல், சாட்சியாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்).

(ஆ) பொலிஸ் நிலையங்களில் அங்கவீனம் தொடர்பான கவனத்தை ஏற்படுத்தும் முக்கிய விடயங்களை உட்புகுத்தல். (இக் கவனம் தொடர்பாக முக்கிய விடய சமிக்ஞை மொழி மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் பிரேல் உபகரணங்கள் மூலம் விசேட தேவைகளுடன் கூடிய நபர்களுக்கு சேவையை வழங்குவதற்கான வளமும் ஆற்றலும் உள்ளடங்கி இருக்க வேண்டும்).

### 2.1.6 மகளிர் மற்றும் சிறுவர் நலனோம்பல்

-------------------------------------------------------

(அ) விசேட தேவையுடைய மகளிரது இனங்காணப்பட்ட / முன்னுரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல்

(ஆ) விசேட தேவையுடைய மகளிரது பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுதல் மற்றும் தீர்வு வழங்குதல் என்பவற்றிற்கு குறித்த அரச நிறுவனங்களது பங்களிப்புடனான உயர்மட்டத் தீர்மானங்களை மேற்கொள்ளும் குழு ஒன்றை அமைத்தல்

(இ) இனங்காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட 2014 விசேட தேவையுடையவர்களுக்கான தேசிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் அமைந்த மாற்றத்துடன் கூடிய செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல்.

(ஈ) பயிற்சி, மதியுரை, தொடர் நடவடிக்கையை மேற்கொள்ளுதல் தொடர்பான பொருத்தமான அமைப்பு ஒன்றுடன் விசேட தேவையுடைய மகளிருக்கு வருமானத்தை ஈட்டுவதற்கு உதவி அளிப்பதற்கென பிறிதாக அரசாங்கத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல்.

(உ) மகளிரது பிரச்சினைகள் தீர்வு செய்யப்படுவதற்கும் உரிமைகள் மீறப்படாதிருப்பதற்கும் சான்றுறுதி அளிப்பதற்கு ஏனைய நபர்களின் பங்குபற்றுதலுடன் விசேட தேவையுடையவர்களுக்கென மாவட்ட மட்டத்தில் ஒழுங்குபடுத்தல் குழுக்களை நியமித்தல்.

(ஊ) மகளிரது பிரச்சினைகளை தீர்வு செய்வதற்கு மாவட்டக் குழு அங்கத்தவர்களது பங்குபற்றுதலுடன் விசேட தேவையுடைய மகளிரது தேசிய மட்டத்திலான குழுக்களை நியமித்தல்.

(எ) பொது மக்களின் கலந்துரையாடலுக்காக விசேட தேவையுடைய மகளிரது உரிமைகள் தொடர்பாக தொலைக்காட்சி, வானொலி, புதினப் பத்திரிகைகள் என்பவற்றின் மூலம் தேசிய மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**2.1.7 விசேட தேவையுடையவர்களது உரித்தைப் பாதுகாப்பதற்கு, மதிப்பளிப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு அரசியலமைப்பு ரீதியாக, கொள்கை ரீதியாக மற்றும் நிறுவன ரீதியாக நடவடிக்கை எடுத்தல்.**

---

(அ) விசேட தேவையுடையவர்களது உரிமைகள் தொடர்பான பிரமாணங்கள் மற்றும் ஏனைய சர்வதேச கட்டமைப்புடன் இசைவாக இருப்பதை சான்றுறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை மீளாய்வு செய்தவாறு தற்போதுள்ள அங்கவீனம் தொடர்பான சட்டங்களை கலந்துரையாடி மீளாய்வு செய்தல்.

(ஆ) மீளாய்வு செய்யப்படுவதற்காக மனித உரிமைகள் சட்ட கல்வியறிவு உள்ளோரும் தொழில்சார் துறையினரும் விசேட தேவையுடையவர்களது உரித்துடன் தொடர்புடைய ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த நிபுணர்கள் (உதாரணமாக, கல்வி, போக்குவரத்து, நகர அபிவிருத்தி, ஊடகம், மன நல சுகாதாரம்) உள்ளடங்கலான சிவில் சமூக தேர்ச்சியாளர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமித்தல்.

(இ) விசேட தேவையுடையவர்களது உரிமைகளை உறுதி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை வழங்கும்போது சான்றின் அடிப்படையை அதிகரித்துக் கொள்வதற்காக அங்கவீனத்தை விளக்கும் தரவினை தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மட்டத்தில் சேகரித்தலும் அறிக்கையிடலும் பயன்படுத்துதலும்.

சமூக வலுவூட்டல் அமைச்சினால் மேற்படி 2.1.1 தொடக்கம் 2.1.7 வரையான நடவடிக்கைகள் தொடர்பாக பூரண நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிராததுடன், இந் நடவடிக்கைகளில் ஒரு பகுதி மாத்திரமே அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள அங்கவீனர்களுக்கான தேசிய மன்றம், சமூக சேவைகள் திணைக்களம் போன்றவற்றால் அமுலாக்கப்படுகின்றன. இதனடிப்படையில் அங்கவீனர்களுக்கான தேசிய செயலகத்தால் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பாக இவ்வறிக்கையின் மூலம் கருத்திற் கொள்ளப்பட்டது.

## 2.2 கணக்காய்விற்கான தலைப்பைத் தெரிவு செய்தல்

---

விசேட தேவைகளுடன் கூடிய நபர்கள் (அங்கவீனர்கள்) மீது கவனம் செலுத்தாத மற்றும் அவர்கள் வேறு வகைப்பட்டோர் எனக் கணிப்போர் அவர்களையும் சமமான மனித உரிமைகள் மற்றும் பொறுப்புகளை உடைய மனிதர்களாக உணராத, ஏனைய நபர்கள் பெறக் கூடிய சமமான சந்தர்ப்பங்களை அவர்களுக்கு வழங்காத மற்றும் குறித்த அங்கவீனம் காரணமாக அங்கவீனர்களை பிரதான சமூக நீரோட்டத்தில் நீக்கி விடுதல் போன்ற நிலைமைகளை தற்போதைய சமுதாயத்திலிருந்து அகற்றி அந்த நபர்களும் சமுதாயத்தில் சம உரித்துடைய நபர்களாக அமைவதற்கு அரச துறையின் தலையீடு, பிரதானமாக, சமூக வலுவூட்டல் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அங்கவீனர்களது வாழ்க்கைக்கு நிழல் அளிப்பதாக, அவர்களை சமுதாயத்தின் சக்தி மிக்க நபர்களாக உருவாக்குவதற்கு பல்வேறு சலுகைகளை வழங்குவதில் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் உள்ள அங்கவீனர்களுக்கான தேசிய மன்றம், அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம், சமூக சேவைகள் திணைக்களம் என்பன பிரதானமாக ஒருங்கிணைந்து செயற்படும் நிறுவனங்களாகும்.

மேற்படி நிறுவனங்களுக்கு வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் வருடாந்தம் குறிப்பிடத்தக்க நிதியேற்பாடு வழங்கப்படுகின்றது. அத்தொகையின் மூலம் குறைந்த வருமானமுடைய அங்கவீனர்களது பொருளாதார, கல்வி மற்றும் சமுதாய நிலையை சக்திமிக்கதாக நடாத்துவதற்கு ஆற்றல் பெறப்பட்டுள்ளதா என்பதை மதிப்பாய்வு செய்வதற்கு இத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டது.

## 2.3 கணக்காய்வின் நோக்கம்

---

இச் செயற்பாட்டுக் கணக்காய்வின் மூல நோக்கமானது அங்கவீனர்களுக்கு சமுதாய வலுவூட்டல் அமைச்சின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் நிதி நியாயமாக வழங்கப்பட்டுள்ளதா, தனிப்பட்ட ரீதியில் அவற்றின் பயன்பாட்டினால் அவர்கள் சமுதாயத்தின் சாதாரண மக்களுடன் சமமான உரிமைகளை வகிக்கின்றனரா என்பதை மதிப்பாய்வு செய்வதே,

அங்கவீனர்களை வலுவூட்டுவதற்கு 2014 தொடக்கம் 2019 யூன் 30 வரையான 05 ஆண்டு காலப்பகுதியின்போது பெறப்பட்ட தொகையும் செலவினமும் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 06.30.இல் உள்ளவாறு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ------------ | --------- | --------- | -------- | -------- | --------- | ------------ | ------------ |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| அரசாங்க மானியம் | 46.860,000 | 35.829.286 | 40,000,000 | 42,000,000 | 43,000,000 | 36,500,000 | 244,189,286 |
| சுப்பிறிவாசனா நிதியத்திலிருந்து பெறுவனவு | 35,451,533 | 40,992,790 | 33,793,090 | 25,464,899 | 23,847,060 | 10,400,000 | 169,949,372 |
| | ------------ | ------------- | ------------- | -------------- | -------------- | -------------- | -------------- |
| மொத்த வருமானம் | 35,451,533 | 40,992,790 | 73,793,090 | 67,464,899 | 66,847,060 | 46,900,000 | 414,138,658 |
| | ======== | ======== | ======== | ======== | ========= | ======== | ========= |
| i.வீடுகளை நிர்மாணிப்பதற்கு உதவி வழங்குதல் | 33,643,804 | 24,592,505 | 49,845,980 | 35,907,440 | 18,742,761 | 045, 2,073 | 164,805,535 |
| ii.உதவி உபகரணங்களை வழங்குதல் | 29,762,905 | 10,113,305 | 13,548,357 | 13,137,000 | 13,030,893 | - | 79,592,460 |
| iii.சுய வேலை வாய்ப்பு உதவி வழங்குதல் | 6,241,349 | 10,169,442 | 9,298,904 | 9,987,610 | 10,053,057 | 7,030,000 | 52,780,362 |
| கல்விக்கான உதவி வழங்குதல் | 1,648,950 | 1,779,320 | 3,132,382 | 3,591,021 | 3,957,431 | 3,242,000 | 17,351,104 |
| மருத்துவ உதவி வழங்குதல் | 6,260,573 | 8,494,983 | 6,064,391 | 7,338,560 | 8,888,806 | 7,530,000 | 44,577,313 |
| | ------------ | ------------- | ------------- | -------------- | -------------- | -------------- | --------------- |
| | 77,577,581 | 55,149,555 | 81,890,014 | 69,961,631 | 54,672,948 | 19,875,045 | 359,106,774 |
| | ======== | ======== | ======== | ======== | ========= | ======== | ========= |

## 2.4 கணக்காய்வின் நோக்கெல்லை

-----------------------------------------

(அ) இலங்கையில் குறைந்த வருமானம் ஈட்டும் அங்ஙவீனர்களின் பொருட்டு அங்கவீனர்களுக்கான தேசிய செயலகத்தால் வழங்கப்படும் உதவி சம்பந்தமாக பரீசீலனை மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில், பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவைப் பிரிவுகளது நடவடிக்கைகளிலும் கணக்காய்வின்போது கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய, காலி, களுத்துறை, கேகாலை, கண்டி, கொழும்பு ஆகிய 05 மாவட்டங்களின் 13 பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவை பிரிவுகள் பரீசீலனைக்குள்ளாகின.

(ஆ) மேற்படி பிரதேச செயலகங்களால் அங்கவீனர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்கான உதவி, சுய தொழிலுக்கான உதவி என்பன நேரடிப் பரீசீலனைக்குள்ளாகின.

(இ) இச் செயற்பாட்டு அறிக்கையில் 2014 தொடக்கம் 2019 யூன் வரை அங்கவீனர்களுக்கு வழங்கப்பட்ட உதவி மற்றும் சலுகைகள் தொடர்பாக அமைச்சினது அறிக்கையின் மூலமான தரவுகள் உள்ளடக்கப்பட்டன.

## 2.5 தொடர்பாடல் நிறுவனங்களும் கடமைகளும்

-----------------------------------------------------------------

அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான தொடர்பாடல் ஆவதுடன் அவற்றின் பணிகள் பின்வருமாறு

| நிறுவனம் | | பணிகள் |
|---|---|---|
| அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம் | (அ) | அங்கவீனர்களது நலனோம்பலை மேம்படுத்துதல், அவர்களது உரிமைகளைப் பாதுகாத்தல் என்பன |
| | (ஆ) | அங்கவீனர்கள் சம்பந்தமாகவும் அவ்வாறானவர்களுக்கு வழங்கப்படக் கூடிய சேவை சம்பந்தமாகவும் தவறில்லாத புள்ளி விபரங்களைப் பேணுதல் |
| | (இ) | அங்கவீனத்திற்கான பிரதான காரணத்தைக் கண்டறிதலும் அவற்றைத் தவிர்ப்பது மற்றும் |

கட்டுப்படுத்தல் ஆகியவற்றிற்கான பயனுள்ள நடவடிக்கைகளை மேம்படுத்தலும்

(ஈ) அங்கவீனர்களுக்கான புனர்வாழ்வுக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைத் தயாரித்து அவற்றை மேம்படுத்துதல்.

(உ) அங்கவீனர்களுக்கு மேலும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குவதில் கவனம் செலுத்தல்

(ஊ) அங்கவீனர்களது தேவைகள் போதியளவு பூர்த்தி செய்யப்படுவதில் கவனம் செலுத்துதல்

(எ) அங்கவீனர்களுக்குத் தங்குமிட வசதிகளை வழங்கி அவர்களைப் பாதுகாப்பதற்கு நிறுவனங்களை அமைத்து நடாத்துவதும் அவ்வாறான நபர்களுக்கு கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சிகளை வழங்குதலும்,

(ஏ) அங்கவீனர்களைப் பராமரிப்பதற்கு அமைக்கப்படும் நிறுவனங்களது நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதல், அவற்றிற்கு உதவி வழங்குதல், அந் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வையிடல்.

(ஐ) வருமானத்தை ஈட்டும் தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் உதவியளித்தல்

(ஒ) அங்கவீனர்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான வழிவகைகள் தொடர்பாக கல்விசார், மற்றும் ஆராய்ச்சிகள் தொடர்பாகத் தைரியமளித்து சகல நடவடிக்கைகளின் போதும் அவர்களது பங்குபற்றும் ஆற்றலை மேம்படுத்துதல்.

| | | |
|---|---|---|
| **சமூக சேவைகள் திணைக்களம்** | (அ) | அங்கவீனர்களுக்கு வேலை வாய்ப்புக்கான சந்தைகளை இனங்காண்பதும் அவற்றை விரிவுபடுத்தலும் |
| | (ஆ) | உதவி உபகரணங்களை வழங்குதல் |
| | (இ) | விசேட தேவையுடைய சிறுவர்களைப் பொறுத்தவரை தாமதமின்றி தலையீடு மேற்கொள்வதன் மூலம் அவர்களை கல்வியில் ஈடுபடுத்துவதற்கான அறிமுகம். |
| | (ஈ) | சேவைகளை வழங்கும் உத்தியோகத்தர்களின் அறிவு, திறமை மற்றும் நோக்கங்களை அதிகரிப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல். |
| | (உ) | கேட்கும் திறனற்றவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதலும் சமிக்ஞை மொழி மொழி பெயர்ப்புச் சேவைகளை வழங்குதலும் |
| | (ஊ) | பராமரிப்பாளர் அற்ற மந்த புத்தியுடைய ஆண் சிறுவர்களுக்குப் பாதுகாப்பளித்தல். |
| | (எ) | அங்கவீனர்களது நலனோம்பலுக்கென நடாத்தப்படும் தொண்டர் ஸ்தாபனங்களுக்கு நிதி உதவி வழங்குதல் |
| | (ஏ) | அறுபது வயதுக்குக் குறைந்த கண் பார்வை அற்றோருக்குப் பார்வையைப் பெற்றுத் தருவதும் மருத்துவ உதவி வழங்குதலும் |
| | (ஐ) | கண் பார்வை அற்ற சிறுவர்களுக்கு விளையாட்டுத்துறை, கல்வி மற்றும் கலாசார உதவிகளை வழங்குதல் |

## 2.6 கணக்காய்விற்கான அதிகாரம்

---------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.7 கணக்காய்வுப் பிரவேசம்

---------------------------------------------

கணக்காய்வுப் பிரவேசத்திற்குப் பின்வரும் கட்டளைச் சட்டங்கள், சுற்றறிக்கைகள் என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட்டன.

- 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச் சட்டம்.
- 2003 அங்கவீனம் தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை
- 2014 அங்கவீனர்கள் தொடர்பான தேசிய செயல் நடவடிக்கைத் திட்டம்.
- 2016 அங்கவீனர்களது உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சட்டவாக்கம்
- 2017 - 2021 மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான தேசிய செயல் நடவடிக்கைத் திட்டம்.
- நேர்முகக் கலந்துரையாடல்
- தகவல்களைப் பகுப்பாய்வுடன் பரிசீலித்தல் நேரடிப் பரிசோதனை
- தகவல்களைக் கோருதல்
- அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் என்பன.

## 3. விரிவான கணக்காய்வுக் களம்

-----------------------------------------------

### 3.1 விசேட தேவையுடையவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சூழலை உருவாக்குதல்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

#### 3.1.1 விசேட தேவையுடையவர்களுக்கான தேசிய கொள்கை

------------------------------------------------------------------------------------------------------

சமூக சேவைகள் திணைக்களத்தால் 2003 ஆகஸ்ட் மாதத்தில் அங்கவீனம் தொடர்பாக இலங்கையின் தேசிய கொள்கைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அங்கவீனம் தொடர்பான தேசிய கொள்கையின் மூலம் சமுதாய நீதியின் பெயரால் அங்கவீனர்களது உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் என்பன நடைபெறுகின்றன. அவர்களும் ஏனைய பிரசைகளைப் போன்றே பூரணமானதும் திருப்தியளிப்பதுமான வாழ்க்கையை வாழ்வதற்கான ஆற்றல், தேசிய அபிவிருத்தியில் பங்களித்தல் என்பவற்றிற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. இக்கொள்கைப்படி அங்கவீனர்களது வருமானம், தொழில், தொழில்சார் நிபுணத்துவம், கல்வி, வீடமைப்பு, சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் எனும் மூல விடயங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

#### 3.1.2 விசேட தேவையுடையவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச் சட்டம்

---------------------------------------------------------------------------------------------------------------

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச் சட்டமானது அங்கவீனர்களுக்குத் தேசிய மன்றம் ஒன்றை உருவாக்குதல் பொருட்டும் இலங்கையில் உள்ள அங்கவீனர்களது உரிமைகளை மேம்படுத்துதல், தீவிர அபிவிருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றிக்கும் அவற்றுடன் தொடர்புடைய அல்லது இணைந்த விடயங்களின் பொருட்டும் ஏற்பாடுகளை வழங்குவதற்கும் செயற்படும் அதிகாரச் சட்டம் ஆவதுடன் இந்த அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில் அங்கவீனர்களுக்கான 22 பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும், அதில் குறிப்பிடப்பட்ட பின்வரும் பணிகள் இதுவரை நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கை இன்றி இருந்தன. (இணைப்பு 01)

(அ) அங்கவீனர்களது நலனோம்பலை மேம்படுத்துதல் மற்றும் அவர்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்களுக்கு பரிந்துரை செய்தல்

(ஆ) அங்கவீனர்கள் சம்பந்தமாகவும் அவ்வாறானவர்கள் பெறக் கூடிய சேவைகளும் தொடர்பாக தவறற்ற புள்ளி விபரங்களைப் பேணுதல்.

(இ) அங்கவீனர்களும் ஈடுபடக்கூடிய பௌதீக சூழலைத் தயாரிக்கும் வேலைத்திட்டங்களை அறிமுகஞ் செய்தலும் தகவல்களை வழங்குவதற்கும் அங்கவீனர்களின் ஊடகப் பிரவேசத்திற்கும் இயலுமானவாறான திட்டத்தை அமுலாக்குதல்.

(ஈ) அங்கவீனர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கமும் தொண்டர் நிறுவனங்களும் தனி நபர்களும் தயாரிக்கும் மூல மற்றும் அமுலாக்கப்பட்டவாறிருக்கும் வேலைத் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் மற்றும் தேவையான பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் அவ்வாறான பணிகளுக்கு நிதி வழங்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றிற்கு மீளாய்வாண்டளவில் 138 தொண்டர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் அந் நிறுவனங்கள் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 விசேட தேவையுடையவர்கள் தொடர்பான முகாமைத்துவத் தகவல் முறைமையைப் பேணுதல்

----------------------------------------------------------------------------------------------------------------------------

அங்கவீனம் தொடர்பான இலங்கை தேசிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், தேசிய ரீதியாக அங்கவீனர்களது தரவுகளினது கூட்டுத்தொகை எண்ணிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். 2012 ஆம் ஆண்டில் குடிசன, புள்ளி விபரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்போது சரீர மற்றும் மன நலக் குறைபாடுடைய 1,617,924 நபர்கள் புள்ளி விபரத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டடிருந்ததுடன், அப்புள்ளி விபரம் தேசிய செயலகத்தாலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அப்புள்ளி விபரத்தில் குறைந்த வருமானம் பெறும் அங்கவீனர்கள் தொடர்பாக வேறான தரவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நாட்டில் வாழும் அங்கவீனர்களது நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் அடங்கிய தரவு வங்கி ஒன்றைப் பேணாமை அங்கவீனர்களின் தகவல்கள் இல்லாதிருப்பதற்கான பிரதான குறைபாடாக அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான நடவடிக்கைகள் எதுவும் அமைச்சினால் மேற்கொள்ளப்படவுமில்லை. இத் தகவல் முறைமையை தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகளை அறிக்கை மூலம் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிவிக்குமாறு 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழு பணிப்புரை விடுதிருந்தபோதும், அது இதுவரை அமுலாகாமையால் 2018 செப்டம்பர் 07 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவும் அப் பணிப்புரையை அமுலாக்குமாறு மீண்டும் தெரிவித்திருந்தது. 2019 ஆம் ஆண்டில் தரவு முறைமையைத் தயாரிப்பதற்கென ரூபா 15 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செப்டம்பர் 30 ஆம் திகதியளவில் தரவுத் தயாரிப்பு வேலையில் 75

சதவீதம் முடிவடைய வேண்டுவதுடன், நிதி ஏற்பாட்டில் ரூபா 9.50 மில்லியன் அச் சமயத்தில் செலவழிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தது. ஆயினும், 2019 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் தரவுத் தயாரிப்பிற்கான திட்டம் ஆரம்பிக்கபடாதிருந்தது. அதற்கமைய, ஏற்பாடு செய்யப்பட்ட நிதி முற்றாக சேமிப்புக்குள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும், 05 மாவட்டங்களில் உள்ள 13 பிரதேச செயலகங்களில் குறைந்த வருமானம் பெறும் அங்கவீனர்களது விபரம் கணக்காய்வில் பரீசிலிக்கப்பட்டபோது அந்த 13 பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவைகள் உத்தியோகத்தர்களால் 7,065 குறைந்த வருமானம் பெறும் அங்கவீனர்களது விபரம் சேகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் இணைப்பு 2 இல் உள்ளது.

### 3.1.4 அங்கவீனர்களின் பொருட்டான கடமைகளை நிறைவேற்றுவதற்காக செயலகம் வழங்கியுள்ள மனிதவள மற்றும் பௌதிக வளத்தில் உள்ள குறைபாடுகள்.

---

அங்கவீனர்களது தேசிய செயலகத்தின் கடமைகளை முறையாக நிறைவேறுவதற்கு நிரந்தரப் பதவியணியினர் அவசியமாகும். அதற்கமைய, முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் டீஎம்எஸ்/பீ1/41/03 இலக்கமுடைய 2018 மார்ச் 19 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் அங்கவீனர்களுக்கான தேசிய செயலகத்தின் 16 பதவிகளுக்கான 40 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். அப் பதவிகளுள் சட்ட உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், சமிக்ஞை மொழி மொழிபெயர்ப்பாளர், கணக்காளர் மற்றும் பிரேல் போதனையாளர் பதவி போன்ற பிரதான பதவிகளும் உள்ளடங்கியிருந்தன. எவ்வாறாயினும், நவம்பர் மாதமளவிலும் நிரந்தர உத்தியோகத்தர்களை செயலகத்தில் நியமனஞ் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சமூக வலுவூட்டல் அமைச்சின் 26 பதவியணியினரால் மன்றத்தின் நடவடிக்கைகள் நடாத்தப்பட்டவாறிருந்தன. செயலகத்தில் போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாமை காரணமாக அங்கவீனர்களுக்கு வழங்கப்படும் சலுகைச் சேவைகளும் உதவி பண வழங்கலும் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு முறையாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததா என்பதைத் தொடர் நடவடிக்கைகளின் வாயிலாக அறிய முடியாதிருந்தது.

## 3.2 அங்கவீனர்களுக்கென அமுலாகும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்

---

### 3.2.1 வீடுகளுக்கான உதவியை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

---

இலங்கையில் உள்ள அங்கவீனர்களை சமுதாயத்தில் வலுவூட்டுவதற்கான ஒரு பிரதான பிரிவாக அங்கவீனர்களுக்கான தேசிய மன்றத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் வீடுகளுக்கான உதவியை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா

250,000 உதவிப் பணமாக வழங்கப்பட்டது. உள்ள வீட்டைப் பாதுகாப்பதற்கு ரூபா 150,000 வழங்கப்பட்டது. இதற்கான நிதியேற்பாடு தேசிய லொத்தர் சபை நடாத்தும் சுப்பிறி வாசனா லொத்தர் விற்பனை மூலம் பெறப்படும் பணத்தின் 5 சதவீதம் மூலம் அங்கவீனர்களின் செயலகத்திற்கு வழங்கப்படுகின்றது.

குறைந்த வருமானமுள்ள நபர்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கு அவர்களுக்குக் காணி சொந்தமாக இருத்தல் வேண்டும். அவ்வாறே, வீட்டுக்கான உதவியைக் கோரும் நபர் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தரிடமிருந்து குறித்த விண்ணப்பப் படிவத்தைப் பெற்று கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச யெலாளரின் அங்கீகாரத்துடன் பரிந்துரையின் பொருட்டு அதனை தேசிய செயலகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். தேசிய செயலகம் மாவட்ட அடிப்படையில் விண்ணப்பங்களை நிரல்படுத்தி நிதியைப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் உதவியை வழங்கும்.

தேசிய செயலகம் 25 மாவட்டங்களில் வசிக்கும் குறைந்த வருமானத்தைப் பெறும் நபர்களுக்கு வழங்கும் வீடுகளுக்கான உதவி சம்பந்தமாகப் பேணும் தரவு முறைமைக்கைய 2014 தொடக்கம் 2019 யூன் 30 வரை 984 வீடுகளை நிர்மாணிப்பதற்கு முதலாம் தவணைப் பணமாக வழங்கியிருந்த தொகை ரூபா 98,371,506 ஆகும். இரண்டாம் தவணையில் வழங்கப்பட்ட தொகை ரூபா 103,608,996 ஆகும். விபரம் வருமாறு

| | விபரம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019யூன் 30 இல் உள்ளவாறு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| I. | உதவி வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 197 | 109 | 427 | 98 | 66 | 87 | 984 |
| II. | கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா . மில்லியன் | 20.1 | 10.8 | 42.5 | 9.7 | 6.8 | 8.6 | 98.4 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கவீனர் வசிப்பதற்கு வழங்கப்படும் வீட்டு உதவிக்கு நிகராக, நிர்மாணிக்கப்பட வேண்டிய வீடு தொடர்பான குறிப்பிட்ட நியமத்துடனான திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, வழங்கப்படும் தொகைக்கு நிகராக வீடுகளை நிர்மாணிக்க முடியாது போன சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், 2014 தொடக்கம் 2018 வரை 25 மாவட்டங்களில்

ரூபா 250,000 வீதம் 570 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், ஒரு வீட்டிற்கு ரூபா 250,000 வீதம் 357 வீடுகளுக்கு ரூபா 89,250,000 மாத்திரமே வீட்டு உதவியாக வழங்கப்பட்டிருந்தது. இவ் வீடுகளை நிர்மாணித்ததன் பின்னர் அதனைக் குறிப்பிட்டு இறுதி செயல் முன்னேற்ற அறிக்கையை குறித்த பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தரின் மூலம் செயலகத்திற்கு அனுப்ப வேண்டும். எனினும், முற்றாகப் பணம் வழங்கப்பட்ட 357 வீடுகளில் 251 வீடுகளுக்கான செயல் முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் இணைப்பு 03 இல் உள்ளது.

(ஆ) அங்கவீனர்களுக்கான செயலகத்தால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும் வீடுகளுக்கான பணம் முழுவதும் கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் செயல் முன்னேற்றத்தைப் பரிசீலிப்பதற்கு முறையான நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்பட்டிராமை மேற்படி (அ) க்கான காரணமாகும்.

(இ) தேசிய செயலகத்தால் வீடுகளை அமைப்பதற்கு பிரதேச செயலகங்கள் முழுத் தொகையையும் வழங்கியிருந்தபோதும், குறித்த அங்கவீனருக்கு தவணைப் பணம் வழங்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் காரணமாக வருடாந்தம் வழங்கப்படும் தொகை முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை மதிப்பாய்வு வெய்வதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளபட்டிராமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) வீடொன்றை அமைப்பதற்கு வழங்கப்படும் உதவித் தொகை 3 தவணைகளில் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டபோதும், அது அங்கவீனருக்கு அல்லது அவருக்காகச் சமூகமளிக்கும் குடும்ப அங்கத்தவரிடம் வழங்கப்படும் விதம் முறையாக அமையாததுடன், அது சம்பந்தமாக அங்கவீனரோ அவருக்காகச் சமூகமளிக்கும் குடும்ப அங்கத்தவருக்கோ அறிவிக்கப்படாதிருந்தமை நேரடிப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டன. இதன் காரணமாக, 2014 தொடக்கம் 2019 யூன் 30 வரை 22 மாவட்டங்களில் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்ட 219 வீடுகளுக்கு தவணைப் பண நிலுவையாக ரூபா 20,642,000 செலுத்தப்பட வேண்டியிருந்தது. ஏறக்குறைய 5 ஆண்டு காலமாக தவணைப் பணம் வழங்குவதில் தாமதம் நிலவியது. அதன் விளைவாக, வீடுகளை நிர்மாணிப்பதில் தாமதம் அல்லது அவற்றை நிர்மாணிப்பது இடை நிறுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இவை தொடர்பான விபரம் இணைப்பு 4 இல் உள்ளது.

(உ) அவ்வாறே, வீடுகளுக்கான உதவியைப் பெறுபவர் அங்கவீனராதலால் நிர்மாண வேலைகளுக்கு மேற்படி 3.3.3 க்கமைய ஆலோசனை வழங்குவதைப் போன்றே நிர்மான வேலைகளை துரிதப்படுத்துவதற்கு வழிகாட்டி தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும். எனினும், அவர்களுக்கு அவ்வாறான வழிகாட்டலோ தொடர் நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்பட்டிராமையும் அதன் காரணமாக நிர்மாண வேலை இடைநடுவே நிறுததப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) தீவின் 08 மாவட்டங்களில் உள்ள 13 பிரதேச செயலகப் பிரிவுகளின் தெரிவு செய்யப்பட்ட 13 அங்கவீனர்களுக்கு ரூபா 250,000 வீதம் புதிய வீட்டை நிர்மாணிப்பதற்கு 4,3 அல்லது 2 தவணைகளில் ரூபா 1,925,000 தவணைப் பணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இருந்தபோதும், இந்த அங்கவீனர்கள் தமது வீடுகளை நிர்மாணிக்கும் பணியை இடை நடுவே கைவிட்டிருந்தனர். இதற்கான காரணத்தைக் கண்டறிந்து வீடுகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வழிகாட்டலைத் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் மேற்கொண்டிருக்கவில்லை. இது தொடர்பான விபரம் இணைப்பு 5 இல் உள்ளது.

(எ) குறைந்த வருமானமீட்டும் அங்கவீனர்களது வீடுகளுக்கான உதவி விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் செயலகத்தால் 03 அல்லது 02 தவணைகளில் பிரதேச செயலகத்திற்கு பணம் அனுப்பி வைக்கப்படும். பின்னர் அது 5 கட்டங்களில் அங்கவீனர்களுக்கு வழங்கப்படும். இதன் போது, அங்கவீனரின் ஏதாவது வசதியின்மை காரணமாக நிர்மாண வேலையில் தாமதம் நிலவுகின்றதா என்பதை சமூக சேவை உத்தியோகத்தர் பரீசிலிக்க வேண்டும். எனினும், வசதியின்மையைக் கண்டறியாமையால் 07 மாவட்டங்களின் 13 பிரதேச செயலகங்களில் உள்ள 13 அங்கவீனர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கென வழங்கப்பட்ட ரூபா 1,650,000 தொடர்பாக வீடுகள் நிர்மாணிக்கப்படாது இத் தொகையைச் செயலகதிற்கு திருப்பி அனுப்பி வைப்பதிலும் 01 தொடக்கம் 02 ஆண்டு வரையிலான தாமதம் நிலவியது. அதன் காரணமாக, இன்னுமொரு அங்கவீனருக்கு வீட்டை நிர்மாணிப்பதற்கு பணத்தை வழங்குவதற்கான சந்தர்ப்பமும் நழுவிப் போயிருந்தது என அவதானிக்கப்பட்டது. விபரம் இணைப்பு 6 இல் உள்ளது.

(ஏ) இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரின் காரணமாக அங்கவீனர்களாகிய பலர் வசிப்பதால் அம் மாகாணங்களில் வீடுகளுக்கான உதவிகளை வழங்குவது சம்பந்தமாக விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. செயலகத்தில் பேணப்படும் வீடமைப்பு உதவித் தரவு முறைமையில் உள்ளடங்கிய தகவல்களின் பிரகாரம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 08 மாவட்டங்களில் வீடமைப்பதற்கான உதவி வழங்குதல் குறைந்த மட்டத்தில் இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதாவது, கிளிநொச்சி, மற்றும் வவுனியா ஆகிய 02 இரு மாவட்டங்களுக்கும் 2014 தொடக்கம் 2018 வரை வீடமைப்பு உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை. அக்காலப்பகுதியின்போது 08 மாவட்டங்களிலும் அங்கவீனர்களுக்கென நிர்மானிக்கப்பட்ட வீடுகளது எண்ணிக்கை 131 ஆகும். விபரம் இணைப்பு 7 இல் உள்ளது.

(ஐ) கொழும்பு மாவட்டத்தின் ஹங்வெல்லை பிரதேச செயலகத்தின் சமூக சேவைப் பிரிவால் அங்கவீனர்களுக்கு வீடமைப்பு உதவி வழங்குவது சம்பந்தமாக பேணப்பட்ட பதிவேட்டில் போதிய விபரங்கள் உள்ளடங்காதிருந்தன. அதற்கமைய, வீடமைப்பதற்காக 05 அங்கவீனர்களுக்கு ரூபா 250,000 வீதப்படி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பிரதேச செயலகத்திற்கு ரூபா 100,000 வீதமே கிடைக்கப்பெற்றிருந்தது. எனினும், 2019 டிசெம்பர் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அத்தொகையில் 04 அங்கவீனர்களுக்கு ரூபா 50,000 வீதம் வழங்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன், அத் தொகை பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, ரூபா 100,000 வழங்கப்பட வேண்டிய மற்றுமொரு அங்கவீனர் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அத் தொகை அவருக்கு வழங்கப்பட்டதா. அல்லது அது மீண்டும் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதா என்பதற்கான குறிப்பெதுவும் இருக்கவில்லை. அது தொடர்பாகத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுமில்லை.

### 3.2.2. தொழிலுக்கான உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

ஐக்கிய நாடுகளின் அங்கவீனர்களது உரிமை தொடர்பான சட்டவாக்கத்தின் 27 ஆம் உறுப்புரையின் மூலம் அங்கவீனரும் ஏனையோருடன் சமமாகப் பணி ஆற்றும் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தொழிலுக்கான சந்தர்ப்பங்களை மேம்படுத்துவதும் இதில் உள்ளடங்கும். அதற்கமைய, அங்கவீனர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்யும் நோக்கில் அங்கவீனர்களுக்கான செயலகத்தின் மூலம் அங்கவீனர்களுக்கோ

அல்லது அவர்களுக்காகக் குடும்பத்தின் வேறொரு நபருக்கோ சுய தொழிலை ஆரம்பிப்பதற்கான அல்லது தற்போது மேற்கொள்ளும் சுய தொழிலை அதிகரிப்பதற்கான சுய தொழிலுக்கான உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்கி அதன் பொருட்டு ரூபா 25,000 அதிக பட்ச உதவியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த உதவிப் பணம் பிரதேச செயலக மட்டத்தில் சமூக சேவை உத்தியோகத்தரின் மேற்பார்வையில் வழங்கப்படும்.

எவ்வாறாயினும், சுய தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இத்தொகை போதுமானதா என்பது பிரச்சினைக்குரியதாக உள்ளமை கணக்காய்வின்போது, அவதானிக்கப்பட்டது. சுய தொழிலுக்கான உதவி வழங்கும் விதிமுறைக்கமைய 2016 தொடக்கம் 2019 செப்டெம்பர் 30 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட சுய தொழிலுக்கான உதவி பின்வருமாறு

| | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|
| | -------- | ------ | ------- | ------- |
| உதவி பெற்றோரது எண்ணிக்கை | 389 | 421 | 412 | 285 |
| கொடுப்பனவு செய்யப்பட்ட உதவி தொகை ரூபா. மில்லியன் | 9.3 | 9.9 | 10.0 | 7.03 |

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கவீனர்கள் சுய தொழிலுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது அந் நபர்களது அங்கவீனத்தை விட அவர்கள் விரும்பும் விசேட நிபுணத்துவத்துக்குரிய தொழில்சார் பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். செயலகத்தால் வருடாந்தம் 300 க்கும் 400 க்கும் இடைப்பட்ட அங்கவீனர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூபா 25,000 வீதம் அதி கூடிய தொகையாக சுய வேலை வாய்ப்புக்கான உதவி வழங்கப்பட்டிருந்தது. அந் நபர்களுக்கு குறித்த துறையில் விசேட பயிற்சியை வழங்குவதற்கு விதாதா போன்ற விசேடத்துவம் வாய்ந்த நிறுவனங்களுடன் தொடர்புபடுத்த சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டபோதும், அந்த உத்தியோகத்தர்களால் அப் பணி நிறைவேறவில்லை. இதன் காரணமாக, பெறப்பட்ட சுய தொழிலுக்கான உதவித் தொகையின் மூலம் போதிய வருமானத்தை அவர்களால் ஈட்ட முடியாது போன சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. உதாரணமாக, ஒரு சந்தர்ப்பத்தில் காளான் விளைச்சலுக்கான சுய வேலை வாய்ப்பு உதவித் தொகையைப் பெற்று சுய தொழிலை ஆரம்பித்திருந்தபோதும், காளானது மூலத்தை அறிந்திருந்த போதும்,

அதனை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அறிவு, கவனம் மற்றும் விற்பனைச் சந்தை நிலைமை ஆகிய விடயங்கள் இல்லாமையால் அச் சுய தொழில் தோல்வியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அங்கவீனரது அங்கவீனத் தன்மை காரணமாக அந்த அங்கவீனர் தெரிவு செய்யும் சுய தொழிலை நடாத்தும் ஆற்றல் அவருக்கு உள்ளதா என்பதைத் தீர்மானித்து உதவித் தொகையை வழங்க வேண்டுமாயினும், அவ்வாறு செய்திராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவின் இரண்டு அங்கவீனர்களுக்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 25,000 வீதம் சுய தொழிலுக்கான உதவியாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அது தொடர்பாகத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சுய தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னர் சுய தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்கான தொழில்சார் பயிற்சியைப் போன்றே அங்கவீனர்களுக்குத் தேவைப்படும் ஒத்துழைப்பு தொடர்பான திட்டத்தையும் விற்பனைச் சந்தை தொடர்பான தகவல்களையும் உள்ளடக்கிய வீட்டை மூலமாகக் கொண்ட சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை வழங்க வேண்டும். எனினும், அவ்வாறான வழிகாட்டலும் ஒத்துழைப்பும் அநேக சந்தர்ப்பங்களில் குறித்த உத்தியோகத்தர்களால் அங்கவீனர்களுக்கு வழங்கப்படாமையும் வழங்கப்படும். உதவு தொகையான ரூபா 25,000 எதிர்பார்தத சுய தொழிலுக்குப் போதுமானதாக இல்லாததாலும் சுய தொழிலை ஆரம்பித்த போதும் அதனைப் பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமாக நடாத்த முடியாது போன சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. உதாரணமாக, தைத்த ஆடைத் தொழிலுக்கு தையல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்த அநேக தொழிலாளரிடத்து தையல் இயந்திரங்கள் இருந்தபோதும், நூல், ஆடை மற்றும் ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குப் பணப் பற்றாக்குறை, கயிறு உற்பத்திப் பொருட்களில் ஈடுபட்டுள்ள சுய தொழில் புரிபவர்கள் இறக்குமதி செய்யப்பட்ட செயற்கை உற்பத்திப் பொருட்களுடன் போட்டியிட முடியாது தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த வசதியற்றுப்போன சந்தர்ப்பங்கள் என்பன நேரடிப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டன.

(ஈ) இந்த உதவி வழங்கப்பட்டு 03 மாதங்களின் பின்னரும் ஓராண்டிற்குப் பின்னரும் சுய தொழிலின் செயல் முன்னேற்றத்தைப் பரிசீலிக்க வேண்டும். இச் செயல் முன்னேற்ற அறிக்கை பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், செயல் முன்னேற்ற அறிக்கை வழங்கப்படுவதன் மூலம் அங்கவீனர் சுய தொழிலை மேற்கொள்வது

உறுதிப்படுத்தப்படுவது அல்லது தொடர் நடவடிக்கைகள் முறையாக நடைபெறாதிருப்பது அவதானிக்கப்பட்டது. விபரம் வருமாறு

| விபரம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| நிதியேற்பாடு - ரூபா. மில்லியன் | 9.30 | 10.00 | 10.00 |
| செலவினம் - ரூபா. மில்லியன் | 9.29 | 9.98 | 10.05 |
| சுய தொழிலுக்கான உதவி வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | 386 | 422 | 412 |
| செயல் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை வழங்கப்படாத எண்ணிக்கை | 386 | 199 | 142 |

### 3.2.3 உதவி உபகரணங்களை வழங்குதல்

அங்கவீனர்கள் மேலும் சுயாதீனமாக இயங்குவதற்கும் சமுதாயத்தில் அவர்கள் நடமாடுதற்குத் தேவையான ஆற்றலையும் வழங்கும் பல்வேறு கருவிகள், உபகரணங்கள் என்பன உதவி உபகரணங்களில் உள்ளடங்கும். நடமாட முடியாத அங்கவீனர்களுக்கு உதவி உபகரணமாக மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, கைகளைத் தாங்கும் பிடி, செயற்கை கை, கால் என்பனவும் வேறு நடமாடுதற்கான உபகரணங்களும், செவிப்புலன் தொடர்பான குறைபாடுடையவர்களுக்கு ஒலியை வழங்கும் உபகரணங்களும், பார்வையற்ற நபர்களுக்கு கண்ணாடி மற்றும் வெள்ளைப் பிரம்புகளும் வழங்கப்பட வேண்டும். சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் 2003 ஆம் ஆண்டின் அங்கவீனம் தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கையின் கீழ் இந்த உபகரணங்களை வழங்குவதை உபாய மார்க்கமாக உள்ளடக்கி அதனை அமுலாக்குவதற்கு 2014 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அங்கவீனம் தொடர்பான இலங்கை தேசிய செயல் நடவடிக்கைத் திட்டடத்தின் சுகாதார மற்றும் புனர் நிர்மாணத்திலும் இது உள்ளடக்கப்பட்டுள்ளது.

2014 தொடக்கம் 2019 யூன் 30 வரை அங்கவீனர்களுக்கான தேசிய செயலகத்தால் அங்கவீனர்களுக்கு உதவி உபகரணங்களை வழங்குவதற்குப் பின்வருமாறு செலவு செய்யப்பட்டிருந்தது.

| ஆண்டு | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 (யூன் 30 இல் உள்ளவாறு) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்பட்ட செலவினம் ரூபா மில்லியன் | 29.76 | 10.11 | 13.54 | 14.13 | 13.03 | 2.32 |

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கவீனர்களுக்கான தேசிய செயலகத்தால் அங்கவீனர்களுக்கு உதவி உபகரணங்களை வழங்கும் வேலைத் திட்டத்திற்கு இனங்காணப்பட்ட முறையான நடைமுறைகள் தொடர்பாக சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டும் விதத்தில் உள்ளகச் சுற்றறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, உதவி உபகரணங்களைப் பெறுவதற்கு அவசியமுள்ள நபர்களுக்கு முறையாக அறிவூட்டும் நடைமுறை அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் குறைந்த வருமானம் ஈட்டும் அங்கவீனர்களின் எண்ணிக்கை இனங்காணப்பட்டிருந்தபோதும், அந் நபர்களுக்குத் தேவைப்படும் உதவி உபகரணங்களை இனங்கண்டு கோரிக்கை விடுப்பதற்கான நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, சக்கர நாற்காலி, கொமட் சக்கர நாற்காலி, வோக்கர்ஸ், கைகளைத் தாங்கும் பிடி, துடைப்பம் மற்றும் கண்ணாடி (கிட்டிய பார்வை மற்றும் தூர மற்றும் கிட்டிய பார்வைக் கண்ணாடி) என்பவற்றினது எண்ணிக்கையை கருத்திற் கொள்ளாது கொள்வனவுகளை மேற்கொண்டு அந்த உபகரணங்களை மாவட்டங்களில் நடாத்தப்படும் நடமாடும் சேவையின்போது விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நடமாடும் சேவைகள் நடைபெறும் இடங்களில் அந்த உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டவர்களது பெயர்ப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதும், அந்நபர்கள் குறைந்த வருமானமுள்ள அங்கவீனர்களா என்பதும் அப் பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கே உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டனவா என்பதற்குமான எதுவித உறுதிப்படுத்தலும் பெறப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் அங்கவீனர்களுக்கு உதவி உபகரணங்கள் தேவைப்பட்டபோதும், அங்கவீனர்களுக்கான தேசிய செயலகத்தாலேயே அந்த உதவி உபகரணங்கள் குறித்த அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதில் வசதியின்மை ஏற்படக் கூடும் என சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் கற்பனை செய்து உபகரணங்கள் தேவைப்படும் அங்கவீனர்கள் அவற்றிற்கு விண்ணப்பிப்பதற்கான அறிவூட்டலை மேற்கொண்டிராத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. உதாரணமாக, நேரடிப் பரிசோதனையின்போது தெரியவந்தவாறு இங்கிரிய பிரதேச செயலகப் பிரிவில் நடப்பதில் குறைபாடுடைய அங்கவீனமான ஒரு சிறுவனுக்கு கொமட் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி தேவைப்பட்டது அவதானிக்கப்பட்டது. அதனைப் பெறுவதற்கான நடைமுறையை சமூக சேவை உத்தியோகத்தர் அச் சந்தர்ப்பம் வரை இனங்காணாதிருந்தார்.

(ஈ) கண் பார்வைக் குறைவுள்ள பாடசாலை சிறுவர்களுக்கு தூரப் பார்வை மற்றும் கிட்டிய பார்வை என்பவற்றிற்கான கண்ணாடிகளை விநியோகிக்கும் நடைமுறையைத் தயாரித்திராமையால் பாடசாலைகளுக்கு அவற்றை அறிவித்திருக்கவில்லை. இதன் காரணமாக, மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் விண்ணப்பிக்க வேண்டிய தூர மற்றும் கிட்டிய பார்வைக்கான கண்ணாடிகளை மருத்துவப் பரிசோதனையின் பின்னர் வழங்குவதற்குப் போதுமான நடைமுறைகள் தயாரிக்கப்படாது அதன் காரணமாக அக் கண்ணாடிகளுக்கான கோரிக்கை குறைவடைந்திருந்தது. அவ்வாறே, கண் பார்வைக் குறைவுள்ள நபர்களுக்கு வழங்கப்படும் கண்ணாடிகளைப் பெறுவதற்கு நடமாடும் சேவைகளுக்கு வருகை தரும் எந்தவொரு நபரும் கிட்டிய பார்வைக்கான கண்ணாடியைப் பெற முடியும். அவ்வாறான கண்ணாடிகளை வேறு தொண்டர் நிறுவனங்களும் வழங்குவதன் காரணமாக குறைந்த வருமானம் பெறும் அங்கவீனர்களுக்கு சிறந்த நலனுடனான சேவையை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொண்டிராமை அவதானிக்கப்பட்டது. இக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்ட நபர்களும் சிறந்த கண் பார்வைப் பெறுபேறுகளைப் பெற்றிராமை அவதானிக்கப்பட்டது.

(உ) வருடாந்தம் கொள்வனவு செய்யப்படும் அங்கவீனர்களுக்கான உபகரணங்கள் குறித்த ஆண்டின்போதே விநியோக்கிக்கப்படாது எஞ்சியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அவற்றை விநியோகிப்பதற்கு ஏறக்குறைய 04 மாதங்கள் கடந்திருந்தன. அங்கவீனர்களது கோரிக்கைகளுக்கு ஏற்ற தேவைக்கமைய

உதவி உபகரணங்களை அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம் கொள்வனவு செய்யாமையே இதற்கான காரணமாக அமைந்தது. அவ்வாறே, 2016 தொடக்கம் 2018 வரை அமுலாக்கிய அரசாங்க சேவையைக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்லுதல் எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் அங்கவீனர்களுக்கான உபகரணங்களை வழங்குவது அமுலாகியபோதும், 2018 ஆம் ஆண்டின் முதல் 02 மாதங்களின் பின்னர் அது நிறுத்தப்பட்டமையால் தேவையை எதிர் பார்க்கும் அங்கவீனர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஆறுதல் வழங்கும் உதவித் திட்டம் வினைத்திறனுடன் செயற்படாது போனமையும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) அங்கவீனர்களுக்கு நன்கொடையாக வழங்குவதற்கு வெளி நாடுகளிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்படும் உதவி உபகரணங்களை வரியின்றி விடுவிப்பதற்கான வழிவகைகளை பொதுத் திறைசேரி சமூக வலுவூட்டல் அமைச்சிற்கு வழங்கியிருந்தது. அதற்கமைய, சிங்கப்பூர் சமூக தொண்டர் நிறுவனம் ஒன்று இந்த அமைச்சிற்கு அவ்வரிச் சலுகையைப் பெற்று அங்கவீனரிடையே விநியோகிப்பதற்காக உதவி உபகரணங்களை நன்கொடையாக வழங்கியிருந்தது. எனினும், அந்த உபகரணங்கள் அங்கவீனர்களுக்கான செயலகத்தின் பரிந்துரைக்கமைய அங்கவீனர்களுக்கு விநியோகிக்கப்பட்டமைக்கான சான்று சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) 2015 வரவு, செலவுத் திட்ட முன்மொழிதல்களின் பிரகாரம், அங்கவீனர்களுக்கு ரூபா 3,000 வாழ்வாதாரப் படியாக வழங்கப்படுவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருந்தது. அதற்கைமய, 2015 தொடக்கம் 2018 வரை வழங்கப்பட்ட அங்கவீனர்களுக்கான படி பின்வருமாறு

| | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| நிதியேற்பாடு - ரூபா. மில்லியன் | 935.9 | 1,077.6 | 1,103 | 1,151.7 |
| செலவினம் - ரூபா. மில்லியன் | 1,167.1 | 1,074.4 | 1,082 | 1,150 |
| நபர்களின் எண்ணிக்கை | 32,422 | 30,005 | 30,077 | 31,956 |
| சேமிப்பு ரூபா. மில்லியன | இல்லை | 3.2 | 20.7 | 10.5 |

2015 தொடக்கம் 2018 வரை ரூபா 3,000 அங்கவீனர்களுக்கான படியாக வழங்கப்படுகையில் வருடாந்தம் நிதியேற்பாடு அதிகரித்திருந்தபோதும், உதவி பெறும் நபர்களது எண்ணிக்கையில் அதிகரிப்பு அவதானிக்கப்படவில்லை மேலும், ஏற்பாடு செய்யப்பட்ட நிதி எஞ்சியமையும் அவதானிக்கப்பட்டது. அங்கவீனர்களது அங்கவீனத்தைக் குறிக்கும் தரவு தேசிய, மாகாண மாவட்ட,

பிரதேச மட்டத்தில் சேகரிக்கப்படுதல், அறிக்கையிடப்படுதல் மற்றும் பயன்படுத்தப்படுதல் என்பன முறையாக நடைபெறாமையும் விலகிச் செல்லும் நலனாளிக்கு புதிய நலனாளி ஒருவரைப் பெயரிடுவதில் தாமதம் ஏற்படுதலும் இந் நிலைமைக்கான காரணமாகும்.

**3.2.4 கல்வி சம்பந்தமான சலுகைகள்**

---------------------------------------------------

(அ) அங்கவீனர்களுக்கான செயலகத்தால் அங்கவீனர்களது கல்விக்கு வசதி அளிப்பதற்காக அவர்களுக்கு நியாயமான வசதிகளும் நியாயமான சந்தர்ப்பங்களும் தனிப்பட்ட ரீதியிலான சேவை வழங்குதலும் நடைபெறுகின்றன. இதற்கமைய, குறைந்த வருமானத்தைப் பெறும் அங்கவீனர் குடும்பத்தில் உள்ள பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைக்கு ரூபா 10,000 அதிக பட்சமாக கல்வி நடவடிக்கைகளுக்கான பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான உதவியாக வழங்கப்படுகின்றது. அதற்கமைய 2015 தொடக்கம் வழங்கப்பட்ட நலன் பின்வருமாறு.

| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 யூன் 30 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) | 1.77 | 3.12 | 3.59 | 3.95 | 3.24 |
| நலனாளிகளின் எண்ணிக்கை | 255 | 377 | 528 | 560 | 378 |

(ஆ) கல்விக்கான உதவியை வழங்குவதன் பொருட்டு இலங்கையில் வசிக்கும் அங்கவீனர்களது எண்ணிக்கை சரிவர இனங்காணப்பட்டிருக்கவில்லை. உதவியைப் பெறுவதற்கென சமர்ப்பிக்கப்படும் சில விண்ணப்பங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக அவை நிராகரிக்கப்பட்டிருந்தன. அவ்விண்ணப்பங்கள் மீண்டும் கவனத்திற் கொள்ளப்படவில்லை. அவ்வாறே, குறைந்த வருமானமுடைய அங்கவீனர்களது பாடசாலைப் பிள்ளைகளுக்கு இவ்வாறான கல்வி உதவி வழங்கப்படுவது தொடர்பாக பாடசாலை மட்டத்தில் அறிவூட்டும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) சமூக சேவைகள் திணைக்களத்தால் 16 தொடக்கம் 35 வரையான வயதுடைய விசேட தேவையுடையவர்களின் பொருட்டு நடாத்தப்படும் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களில் விடுதி வசதிகளை வழங்கி அவர்களுக்கு ஓராண்டு அல்லது 02 ஆண்டு கால தொழில்சார் பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதற்கமைய, திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் 06 தொழில்சார் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அங்கு ஏறக்குறைய 400 பிள்ளைகள் ஒரு தவணையின்போது பயிற்சி பெறுகின்றனர். அவ்வாறே ,பயிற்சியின் பின்னர் எதவாது தொழிலில் ஈடுபட விரும்புபவரை வேலையுடன் தொடர்புபடுத்தி அவ்வப்போது அது சம்பந்தமான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, தொழில்சார் பயிற்சியைப் பெறும் காலப்பகுதியின்போது நாளாந்தம் ரூபா 150 மாதாந்தப் படியாக அவர்களது சேமிப்பு கணக்கிலிடப்படுகின்றது. இவர்களுக்கு காலாண்டுக்கு ஒரு முறை 02 சீருடைகளும் சுகாதார உபகரண வசதிகளும் வழங்கப்படுவதுடன் வருடாந்தம் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல், கலை விழாக்களை நடாத்துதல், வருடாந்த வினோத சுற்றுலாக்களை மேற்கொள்ளுதல் என்பனவும் நடைபெறுகின்றன.

அவ்வாறே, வேலை தேடுபவர்களது பதிவேட்டையும் இந்த நிறுவனம் பேணுவதுடன் அதன் மூலம் சேவை நாடுநருக்கும் விண்ணப்பதாரருக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்படுகின்றது. ஆடை தைத்தல், குளிரூட்டிகளைப் பழுதுபார்த்தல், வீடுகளில் உள்ள குளிரூட்டிகளைப் பழுதுபார்த்தல், மின்சாரத் தொழில்நுட்பப் பயிற்சி, வர்ணம் பூசுதல், பட்டிக் கைத்தொழில், கைத்தறி ஆடைகளை உருவாக்குதல், தச்சு வேலை, சமையல் வேலை மற்றும் கணனிப் பயிற்சி ஆகியவற்றில் கற்கை நெறிகளை விடுதி வசதியுடன் நடாத்தி வேலை வாப்புகளை வழங்குவதன் மூலம் பெருமளவு வெற்றி கிட்டியுள்ளது. அவ்வாறே, பிரம்பு வேலை மற்றும் கயிற்று வேலை என்பவற்றிற்கு சம்பளத்துடனான சேவையைப் பெறுவது வசதியற்றதால் அந்நபர்களுக்கு ரூபா 15,000 பெறுமதியான உபகரணங்களை வழங்கி அவர்களை சுய தொழிலில் ஈடுபட உதவி வழங்கப்படுகின்றது. எவ்வாறாயினும், பயிற்சி நிறைவடையும் சந்தர்ப்பத்திலேயே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக சமூக சேவை உத்தியோகத்தர்கள் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் போதியளவு நடைபெறாதிருந்தது.

### 3.2.7 பிரவேச வசதிகளிலும் தகவல் ஊடகங்களிலும் பிரவேசிக்கும் சந்தர்ப்பங்கள்

(அ) 2006 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 1467/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் பௌதிக பிரவேசம் தொடர்பான சட்டங்களையும் பிரமாணங்களையும் பிரயோகித்தல் மற்றும் அப் பிரமாணங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவற்றையும்

வழிகாட்டலையும் அமுலாக்குதல், அவ்வாறான பிரமாணங்களைக் கடைப்பிடிக்காத அரசாங்க கட்டிடங்களது உரிமையாளர்களுக்கு எதிராகப் புகார் செய்தல் மற்றும் சட்டபூர்வ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் இச்சட்டங்களையும் பிரமாணங்களையும் அமுலாக்குவதுடன் எதிர்பார்த்த இலக்கை அடையவும் முடியாதிருந்தது. கட்டிடங்களில் மாத்திரமின்றி அநேக நெடுஞ்சாலைகளிலும் பொதுப் போக்குவரத்துச் சாலைகளிலும் கூட பிரவேசிப்பதற்கான குறைந்த பட்ச நியமங்களை உருவாக்கி அவற்றை அமுலாக்குவதும் மந்தகெதியில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சமிக்ஞை மொழி மொழிபெயர்ப்புக்கான தேசிய சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். அதற்கமைய, குறைந்த வருமானம் பெறும் சமுர்த்தி குடும்பங்களில் உள்ள கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள 50 பிள்ளைகளைத் தெரிவு செய்து தேசிய அபிவிருத்தி நிறுவகத்தில் 06 மாத கால சமிக்ஞை மொழி மொழிபெயர்ப்பாளர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி ஒன்று தயாரிக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. எனினும், அப்பயிற்சியின் பின்னர் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தும் அரச நிறுவனங்களில் அவர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டளவில் அரச துறையில் சமிக்ஞை மொழி பெயர்ப்பாளர்களாக 06 உத்தியோகத்தர்கள் மாத்திரமே இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.3 விசேட தேவையுடையவர்களுக்குகென அமுலாகும் நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றல் மட்டம்

---

### 3.3.1 விசேட தேவையுடையவர்களை வலுவூட்டுவதற்குத் தேவையான ஒட்டுமொத்த தேவைகள் தொடர்பாகவும் அத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தலும்

---

குறைந்த வருமானம் பெறும் விசேட தேவையுடையவர்களை வலுவூட்டுவதற்கென அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தேவைகள் ஒட்டுமொத்தமாக இனங்காணப்படுவதற்கான வேலைத்திட்டம் எதுவும் இதுவரை அமுலாகியிருக்கவில்லை. அதாவது, அங்கவீனர்களது கோரிக்கையின் போரில் மாத்திரமே உதவிகள் வழங்கப்படுகின்றதுடன், அவர்கள் தொடர்பாக முறையாக ஆராய்ந்து அவர்களை வலுவூட்டுவதற்குத் தேவையான உதவிகள் எவை என இனங்காணப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக, அங்கவீனத்துக்கான படியைப் பெறும் அங்கவீனர் ஒருவருக்கு நடப்பதில் சிரமம் இருப்பின் சக்கர நாற்காலி, கைகளைத் தாங்கும்பிடி அல்லது கைத்தடிகளை வழங்குவதற்கான தேவை கண்டறியப்படவில்லை.

### 3.3.2 குறித்த நிறுவனத்தின் சேவை விசேட தேவையுடையவர்களை சென்றடைதல்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

அங்கவீனர்களது உரிமைகள் பாதுகாப்பதற்கான பொறுப்பு அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் சமூக சேவை திணைக்களத்தால் நிறைவேற்றப்படுகின்றன. இந்த நிறுவனங்களது சேவையைப் பெறுவதற்கு சகல பிரதேச செயலகங்களிலும் உள்ள சமூக சேவை உத்தியோகத்தர்கள் தமக்குரிய கிராம உத்தியோகத்தர் மூலமாக அறிவிக்கப்படுவார். அதற்கமைய, சமூக சேவைகள் திணைக்களத்தால் பேணப்படும் தொழில்சார் பயிற்சி நிலையங்களில் அங்கவீனமுள்ள சிறுவர்களைச் சேர்த்துக் கொள்ள இயலுகின்றது. எனினும் இந் நிறுவனச் சேவைகள் தேவைப்படுபவர்களுக்கு அதனை அறிவூட்டுவதானது போதியளவு நடைபெறாதிருப்பது நேரடிப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

### 3.3.3 விசேட தேவையுடையவர்களது எழுத்தறிவும் தேகாரோக்கியமும்

----------------------------------------------------------------------------------------------------------

பாடசாலைக் கல்வியைப் பெற்றுள்ள வயதான அங்கவீனர் மற்றும் உயர் மற்றும் முறையற்றவாரான கல்வியைப் பெற்றுள்ள வயதான அங்கவீனர்களுடைய கல்வி மட்டத்தின் பிரகாரம் 2003 ஆம் ஆண்டில் இந்த அமைச்சினால் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு 16 ஆண்டுகளாகியும் அது சம்பந்தமான தரவுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. தற்போதும் பாடசாலை செல்லும் வயதுடைய அங்கவீனமான பிள்ளைகள் சம்பந்தமாக கல்வி அல்லது தொழில்சார் பயிற்சியை வழங்குவது பெற்றோரது பெரும் விருப்பமாக அமைந்துள்ளதை தொழில்சார் பயிற்சி நிலையங்களில் அவ்வாறான பிள்ளைகளைச் சேர்ப்பதற்கான பரிசீலனையின்போது அவதானிக்கப்பட்டது.

அங்கவீனர்களது தேகாரோக்கியம் சம்பந்தமாக பூரண பங்களிப்பு சுகாதார அமைச்சின் திட்டத்திற்குட்பட்டது ஆகும். எனினும், பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவை உத்தியோகத்தர்களாலும் நடமாடும் சேவை நடாத்தப்படும் சந்தர்ப்பங்களில் சுகாதார சிசிச்சை முகாம்களுக்கு இந்த நபர்களை அனுப்பவது அவதானிக்கப்பட்டது.

### 3.3.4 விசேட தேவையுடையவர்கள் சமுதாய மற்றும் தேசிய கொள்கைக்குப் பங்களித்தல்

------------------------------------------------------------------------------------------------------------------------

வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சரால் 2002 மே 01 வெளியிடப்பட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சின் தேசிய வேலைவாய்ப்புக் கொள்கை தொடாப்பான வரைவில் இந்த அங்கவீனர்களும் உள்ளடக்கப்பட்டு அவர்களும் தகுதியான வேலைவாய்ப்பைப் பெறுதல், அதனை மேற்கொள்ளுதல் மற்றும் முன்னேற்றுதல் ஆகியவற்றிற்கு அவர்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் அவர்களது அறிவையும்

நிபுணத்துவத்தையும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்குவதும் அந் நபர்கள் சமுதாயத்தில் ஒன்றிணைந்து பொருளாதார வாழ்க்கையில் உட்பிரவேசிப்பதற்கு அரசாங்கம் ஆற்றலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதும் அதற்கமைய உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய வேலைவாய்ப்பை நாடிச் செல்லும் ஏனையோருடன் அங்கவீனரும் வேலை வாய்ப்புத் தள நிலையத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம். இதன் மூலம் நிபுணத்துவம் மதிப்பாய்வு செய்யப்பட்டு அபிவிருத்திக்கு வழிகாட்டப்படுவதுடன் சுய தொழிலுக்கான பாதை திறக்கப்படுகின்றது. சுய தொழிலுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்குதலும் செயற்திட்டங்களை முன்னேற்றுவதற்கான வழிகாட்டலும் கிடைக்கப் பெறுகின்றது. இவ்வாறான நிலைமையை உருவாக்கி அங்கவீனர்களை தைரியப்படுத்தித் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அங்கவீனரும் நாட்டின் தேசிய கொள்கையை அமுலாக்குவதற்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய தகுதி வாய்ந்த நபராக உருவாகுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை அவதானிக்கப்பட்டது.

## 4. பரிந்துரை

----------------

4.1 இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் அங்கவீனர்களது வகைப்படுத்தப்பட்ட தரவு முறைமை ஒன்றைப் பேண வேண்டும்.

4.2 அங்கவீனருக்கான மன்றத்தால் உதவி பெறுபவர் பெறும் பணத்தின் மூலம் வேலையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் நியமத்துடனான வீடொன்றினது மாதிரிப்படிவத்தின் கீழ் வீடொன்றை நிர்மாணிப்பதற்கான விதி முறைகளை உதவி பெறுபவருக்கு அறிமுகஞ் செய்து வைக்க வேண்டும்.

4.3 புதிய வீடொன்றை நிர்மாணபிப்பதற்குச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை மதிப்பாய்வு செய்யும்போது அங்கவீனர் காணிக்கு உரித்து உடையவரா என்பதை முறையாக உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன், காணியற்ற அங்கவீனர்களுக்கும் வீடொன்றை வழங்குவதற்குப் பொருத்தமான நடைமுறைகளை அமுலாக்க வேண்டும்.

4.4 வீடமைப்பு உதவிக்கு வழங்கப்படும் கால வரம்பும் வீட்டை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கும் கால வரம்பும் தொடர்பாக உதவி பெறுபவருக்கு அறிவூட்டல் வேண்டும்.

4.5 சமூக சேவை உத்தியோகத்தரால் வீடமைப்பு தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வீட்டை தொடர்ச்சியாக நிர்மாணித்தவாறு இருக்கும் விதத்தில் உதவி பெறுபவர் வீட்டை நிர்மாணிப்பதில் அவரை ஊக்குவித்தலும் உதவிப் பணத்தின் தவணைத் தொகையை தாமதமின்றி வழங்குவதற்கும் வீட்டை நிர்மாணித்தன் பின்னர் தாமதமின்றி செயல் முன்னேற்றத்தை செயலகத்திற்கு அறிவித்தலும்

4.6 சுய தொலிலுக்கான உதவியை வழங்கும்போது அங்கவீனரோ அல்லது அதில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கும் குடும்ப அங்கவீனரோ சுய தொழிலில் தம்மை ஈடுபடுத்துவதற்குத் தேவையான நிபுணத்துவம் தொடர்பாக தீர்மானித்தல்.

4.7 சுய தொழிலுக்குத் தேவையான தொழில்சார் பயிற்சியை வழங்குதல்

4.8 சுய தொழிலைச் செய்யும்போது தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அது தொடர்பான செயல் முன்னேற்ற அறிக்கையை அலுவலகத்திற்குத் தாமதமின்றி சமர்ப்பித்தலும்.

4.9 அங்கவீனர்களது தேவைகளைக் கண்டறிந்து பல்வேறு கருவிகள், உபகரணங்கள், உதவி உபகரணங்களை வழங்குதல்.

4.10 வயதானவர்களை கண் பரிசோதனைச் சிகிச்சை முகாமிற்கு அனுப்பி நியமத்துகேற்ற கண்ணாடியை வழங்குதல்.

4.11 அங்கவீனர்களுக்கு கல்விக்கான உதவியை ஏழு ஆண்டுகளுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தாதிருத்தல்

4.12 கல்விக்கான உதவியை வழங்குவது பாடசாலை மட்டத்தில் அறிவூட்டப்படுதல்.

4.13 அங்கவீனர்களது தேவைகள் இயலுமான வரை கூடிய அளவில் பூர்த்தியாகும் விதத்தில் ஒழுங்கமைப்புடனான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்குத் தேவையான நிரந்தர பதவியணியினரை நியமித்தல்.

4.14 சகல பிரதேச செயலகத்திலும் சமிக்ஞை மொழி உத்தியோகத்தர் ஒருவரது சேவையை வழங்குவதன் மூலம் அங்கவீனர்களது தகவல்களை முறையாகப் பேணுவதற்கு ஆற்றலை ஏற்படுத்துதல்.

4.15 குறைந்த வருமானத்தைப் பெறும் பெரும்பாலான அங்கவீனர்களுக்கு ஒரே தடவையில் சலுகைகளை வழங்கக் கூடிய விதத்தில் வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் அதிக நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 5. இணைப்பு

-------------

தற்சமயம் இலங்கையில் வாழும் விசேட தேவையுடையவர்களுக்கு சமூக வலுவூட்டும் அரசியலமைப்புப் பணி அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் என்பவற்றினூடாக மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றில், அங்கவீனர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலம் கடமைகளுடன் தொடர்புடைய பிரமாணங்கள், மதியுரைகள், வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகள் வெளியிடப்பட்டுள்ளதுடன், அவற்றை அமுலாக்குவதற்கு சகல பிரதேச செயலகங்களிலும் உள்ள சமூக சேவைப் பிரிவுகள் பணியாற்றவும் வேண்டும். அதற்கமைய, குறைந்த வருமானம் பெறும் விசேட தேவையுடையவர்கள் இப் பிரமாணங்கள் மற்றும் சகல சட்ட ரீதியான தேவைகளின் பிரகாரம் வலுவூட்டப்பட வேண்டுமாயினும், தெரிவுச் செவ்வைக்குள்ளான பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவைப் பிரிவுகளால் அப்பணியானது திருப்திகரமாக நடைபெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகவே, அது தொடர்பாக தேசிய செயலகத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய மேற்பார்வையும் ஒழுங்குபடுத்தலும் மிகக் குறைந்த மட்டத்திலிருப்பதும் தெரிய வந்தது. விசேட தேவையுடையவர்களது எண்ணிக்கை தொடர்பான சரியான தரவு முறைமை பேணப்படாமை வலுவூட்டும் பணியானது திருப்திகரமாக நிறைவேற்றப்பட முடியாமைக்கான பிரதான காரணமாக அமைந்தது.

**இணைப்பு 01**

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கவீனர்களது உரிமைகளை மேம்படுத்துவதற்கு, தீவிர அபிவிருத்தியடையச் செய்வதற்கு மற்றும் பாதுகாப்பதற்குக் கவனம் செலுத்துதல் மன்றத்தின் பிரதான கடமை ஆகும். 13 ஆம் பிரிவில் ஏனைய 22 கடமைகள் காட்டப்பட்டுள்ளன.

(அ) அங்கவீனர்களது நலனோம்பல் மேம்பாடு மற்றும் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் தீவிர அபிவிருத்தியடையச் செய்வது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) தொடர்புடைய அமைச்சு, மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலகம், அரச மற்றும் தனியார் பிரிவு மற்றும் அமைப்புளிடம் விசாரித்தறிந்து அங்கவீனர்களது அர்த்தமுள்ள நிகழ்வுகளையும் உரிமைகளையும் முன்னேற்றுவதும் பாதுகாப்பதை மேம்படுத்துவதற்கும் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல்.

(இ) அங்கவீனர்களது நலனோம்பலை மேம்படுத்தி அவர்களைப் பாதுகாப்பதற்கான திட்டத்தைப் பரிந்துரை செய்தல்.

(ஈ) அங்கவீனர்களது நலனோம்பலை மேம்படுத்தல் மற்றும் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான திட்டத்தை ஆரம்பித்து அவற்றை அமுலாக்கல்.

(உ) அங்கவீனர்கள் தொடர்பான சர்வதேச பிரசுரங்கள், பிரகடணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதையும் கடைப்பிடிக்கப்படுவதையும் கவனித்துக் கொள்ளுதல்

(ஊ) அங்கவீனர்கள் தொடர்பாகவும் அவ்வாறானவர்கள் பெறக் கூடிய சேவைகள் சம்பந்தமாகவும் சரியான புள்ளி விபரங்களைப் பேணுதல்.

(எ) அங்கவீனத்திற்கு பிரதான காரணமாக அமைந்தன எவை என்பதைக் கண்டறிந்து அதனைக் தவிர்ப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பயனுள்ள நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

(ஏ) அங்கவீனர்களது புனர்வாழ்வுக்கு மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைத் தயாரித்து அவற்றை மேம்படுத்துதல்.

(ஐ) அங்கவீனர்களுக்கு மேலும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்குவதற்குப் பொறுப்பாக இருத்தல்.

(ஒ) அங்கவீனர்களது தேவைகள் போதியளவு பூர்த்தியாவதைப் பார்த்துக் கொள்ளுதல்

(ஓ) அங்கவீனர்களுக்கு தங்குமிட வசதியளித்து அவர்களை பாதுகாப்பதற்கான நிறுவனங்களை அமைத்தலும் அவ்வாறானவர்களுக்கு கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சியளித்தலும்.

(ஔ) அங்கவீனர்களுக்குத் தங்குமிட வசதியளிப்பதற்கு நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் அவ்வாறானவர்களுக்கு கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதற்கு அரசாங்கத்தையும் நபர்களையும் ஊக்குவித்தல்.

(க) அங்கவீனர்களைப் பாதுகாப்பதற்கு அமைக்கப்படும் நிறுவனங்களது நடவடிக்கைகளுக்கு வழிகாட்டல், அவற்றிற்கு உதவி அளித்தல், அந் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

(ங) சகல நடவடிக்கைகளிலும் அங்கவீனர்கள் பூரணமாகக் கலந்து கொள்வதற்கு ஊக்குவித்தலும் அதற்கான வசதிகளை அவர்களுக்கு வழங்குதலும்.

(ச) அங்கவீனர்கள் உட் பிரவேசிக்க கூடியவறான பௌதிக சூழலைத் தயாரிக்கும் விதிமுறையை அறிமுகப்படுத்துதல் மற்றும் தகவல்களை வழங்குதல் மற்றும் ஊடகப் பிரவேசம் ஆகியவற்றை அங்கவீனர்கள் பெறக்கூடியவாறான திட்டத்தை அமுலாக்குதல்.

(ஞ) அங்கவீனர்களது நிலையை உயர்த்துவதற்கு அரசாங்கம மற்றும் தொண்டர் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட சபைகளால் தயாரிக்கப்பட்டதும் மூல ஆரம்பிக்கப்பட்டதும் அமுலாக்கப்படுவதுமான நடைமுறைகளையும் திட்டத்தையும் மேற்பார்வை செயதல் மற்றும் ஒருங்கிணைத்தல் மற்றும் அவ்வாறான பணிகளுக்கு மானியம் வழங்குதலும் தேவையான பரிந்துரையைச் சமர்ப்பித்தலும்.

(ட) பிரசுரங்களின் மூலமும் வேலைத் திட்டங்களின் மூலமும் அங்கவீனர்களது நிலைமை மற்றும் தேவைகள் என்பவற்றை பொது மக்களுக்கு அறிவூட்டல்.

(ண) அங்கவீனர்களுக்கு சேவை வழங்குவதில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு மானியம் வழங்குதல் அல்லது அந்நிய உதவியின் மூலம் உதவியளித்தல்.

(த) வருமானத்தைப் பெறும் தொழிலில் ஈடுபடுவதற்கு சகல இயலுமான சந்தர்ப்பங்களிலும் அங்கவீனர்களுக்கு உதவியளித்தல்.

(ந) அங்கவீனர்களது வாழ்க்கைத் தரத்தை சிறப்படையச் செய்யும் விதிமுறைகள் தொடர்பான கல்வி மற்றும் ஆராய்ச்சி என்பவை தொடர்பாக தைரியமளித்தல் மற்றும் சகல நடவடிக்கைகளின்போதும் அவர்களது பங்குபற்றுதலை மேம்படுத்துதல்.

(ப) மேற்படி கடமைகள் யாவும் அல்லது எதுவேனும் ஈடேற்றப்படுவதற்குத் தேவையானவற்றை அமுலாக்குதல்

**இணைப்பு 02**

**பரீசீலனை மேற்கொள்ளப்பட்ட 13 பிரதேச செயலகங்களின் குறைந்த வருமானம் பெறும் அங்கவீனர்களது எண்ணிக்கை.**

| மாவட்டம் | பிரதேச செயலகம் | கிராம உத்தியோகத்தர் பிரிவு | கணக்காய்வுத் தினத்தில் உள்ளவாறான குறைந்த வருமானம் பெறும் அங்கவீனர்களது எண்ணிக்கை |
|---|---|---|---|
| கொழும்பு | ஹங்வெல்லை | 68 | 700 |
| | பாதுக்கை | 46 | 196 |
| | ஹோமாகம | 81 | 910 |
| | கெஸ்பேவ | 73 | 540 |
| களுத்துறை | இங்கிரிய | 31 | 590 |
| | வலல்லாவிட | 60 | 400 |
| | அகலவத்தை | 34 | 400 |
| கேகாலை | கேகாலை | 64 | 601 |
| | மாவனெல்லை | 71 | 551 |
| காலி | அம்பலாங்கொடை | 36 | 476 |
| | எல்பிட்டிய | 51 | 536 |
| கண்டி | பூஜாபிட்டிய | 67 | 644 |
| | பஹத ஹேவாஹெட | 73 | 519 |
| | | | 7065 |

**இணைப்பு 03**

**வீடமைப்பு நிர்மாண செயல் முன்னேற்றத்தை அறிவித்திராத சந்தர்ப்பங்கள்**

| **ஆண்டு** | **ஆரம்பிக்கப்பட்ட வீடுகளது எண்ணிக்கை** | **கொடுப்பனவு முடிவடைந்த வீடுகளின் எண்ணிக்கை** | **நிர்மாண வேலையில் செயல் முன்னேற்றம் இல்லாத வீடுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 2014 | 96 | 67 | 53 |
| 2015 | 80 | 58 | 43 |
| 2016 | 283 | 193 | 134 |
| 2017 | 71 | 33 | 25 |
| 2018 | 40 | 06 | 06 |
| மொத்தம் | 570 | 357 | 251 |

**இணைப்பு 04**

**2014 தொடக்கம் 2019 (யூன் 30 வரை ) தவணைப் பணம் செலுத்தப்பட வேண்டியுள்ள வீடுகள்**

| | மாவட்டம் | வீடுகளது எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 1 | களுத்துறை | 15 | 1,400,000 |
| 2 | மாத்தளை | 6 | 400,000 |
| 3 | ஹம்பாந்தோட்டை | 8 | 900,000 |
| 4 | புத்தளம் | 14 | 620,000 |
| 5 | முல்லைத்தீவு | 5 | 750,000 |
| 6 | கொழும்பு | 20 | 2,180,000 |
| 7 | கம்பஹா | 23 | 2,000,000 |
| 8 | காலி | 9 | 940,000 |
| 9 | மொனராகல | 7 | 530,000 |
| 10 | வவுனியா | 1 | 500,000 |
| 11 | அம்பாறை | 9 | 940,000 |
| 12 | அநுராதபுரம் | 6 | 490,000 |
| 13 | ரத்னபுர | 14 | 1,159,814 |
| 14 | நுவரெலியா | 2 | 250,000 |
| 15 | பொலனறுவை | 14 | 1,000,000 |
| 16 | குருநாகல் | 27 | 2,600,000 |
| 17 | கண்டி | 4 | 582,586 |
| 18 | பதுளை | 5 | 450,000 |
| 19 | மாத்தறை | 7 | 850,000 |
| 20 | மட்டக்களப்பு | 10 | 1,000,000 |
| 21 | யாழ்ப்பாணம் | 03 | 350,000 |
| 22 | திருகோணமலை | 10 | 750,000 |
| | மொத்தம் | 219 | 20,642,400 |

**இணைப்பு 05**

**பணம் வழங்கப்பட்ட போதும் வீடுகளது நிர்மாண வேலை நிறுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள்**

---

| | மாவட்டம் | பிரதேச செயலகம் | ஆரம்பித்த ஆண்டு | பெயர் | தொகை | தற்சமயம் வழங்கப்பட்டுள்ள தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா | ரூபா |
| 01. | அநுராதபுரம் | தம்புத்தேகம | 2014 | தனுசித்மதுசங்க | 230,000 | 200,000 |
| | | மஹவிலச்சிய | 2015 | கே.குணரத்ன | 250,000 | 200,000 |
| 02. | அம்பாறை | பதியதலாவ | 2016 | எச்.என். பிறேமாவதி | 250,000 | 100,000 |
| 03. | களுத்துறை | இங்கிரிய | 2016 | எம்.ஜினதாச | 250,000 | 250,000 |
| 04. | குருநாகல் | கனேவத்த | 2015 | ஏ.பீ.ரங்ஜித் அசன்த | 250,000 | 200,000 |
| | | ” | 2015 | பீ.ஜீ.ஆர்.நவரத்ன | 250,000 | 200,000 |
| | | ரிதீகம | 2016 | ஊபுல் சுமித் ஐ அல்லஜ | 250,000 | 100,000 |
| | | மாவத்தகம | 2016 | லீனஸ் ஐயதிலக்க | 250,000 | 100,000 |
| | | கனேவத்த | 2016 | பீ.நிமல் குமார | 250,000 | 75,000 |
| 05. | கொழும்பு | மஹரகம | 2016 | துலாஜன ரனசிங்க | 250,000 | 50,000 |
| 06. | திருகோணமலை | அம்பகமுவ | 2016 | பீ.ஜ.விக்ரமரத்ன | 250,000 | 150,000 |
| 07. | பொலநறுவை | ஹிங்குராங்கொட | 2016 | கே.எம்.சமரஜீவ | 250,000 | 200,000 |
| 08. | ஹம்பாந்தோட்டை | வலஸ்முல்ல | 2016 | மதுர தர்மசிறி | 250,000 | 100,000 |
| | மொத்தம் | | | | | 1,925,000 |

**இணைப்பு 06**

**வீடமைப்பு உதவிப் பணத்தைத் திருப்பி அனுப்புதல்**

| மாவட்டம் | பிரதேச செயலகம் | அங்கவீனரது பெயரும் முகவரியும் | அங்கவீனம் | வழங்கிய தொகை | திகதி | திருப்பி அனுப்பிய தொகையும் திகதியும் |
|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | | ரூபா |
| 01.குருநாகல் | குளியாப்பிட்டிய மேற்கு | ஆர்.எம்.சந்திரா குமாரி, மாஹிமிபிட்டிய, தலஹிடிமுல்ல | மன வளர்ச்சி குன்றியமை | 100,000 | 2014.05.30 | 100,000<br>2016.02.05 |
| - | உடுபத்தாவ | ஏ.எம்.ஜீ. அத்தநாயக கிம்புல் தொட முல்ல, வெலிபென்ன ஹமுல்ல | சுவாசக் கோளாறு | 100,000 | 2014.05.30 | 100,000<br>2016.02.05 |
| - | குளியாப்பிட்டிய மேற்கு | கே.ஏ.டீ.கருனாநாயக | நடமாடுவதில் குறைபாடு | 100,000 | 2014.20.20 | 50,000<br>2015.04.30 |
| - | கஜசகம | டபிள்யூ.ஐ.எச்.சாகரிகா | மந்த புத்தி | 100,000 | 2017.12.09 | 100,000<br>2018.09.19 |
| | கொபெய்கனே | பிரியதர்சினி | மந்த புத்தி | | | |
| 02.கம்பஹா | கட்டானை | பீ.ரூபவதி | மந்த புத்தி | 100,000<br>100,000 | 2016.03.17<br>2016.10.05 | 200,000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 03.பொலநறுவை | ஹிங்குராக்கொடை | இசுறு குணதிலக | காக்கை வலிப்பு | 100,000 | 2014.08.28 | 100,000<br>2016.12.14 |
| 04. மாத்தறை | கெமுனு முகாம் | குமுது தந்த குணசேகர | பக்க வாதம் | 100,000<br>150,000 | 2015.12.07 | 250,000<br>2016.06.07 |
| - | அதரலிய | எச். நயனதாரா | கேட்கும், பேசும் குறைபாடுகள் | 100,000<br>150,000 | 2015.12.07 | 250,000<br>2016.09.13 |
| - | தெவினுவர | பீ.பீ.சந்திரகுமாரி தெவிநுவர கெலகேன் வீதி தெவிநுவர | மன நலமின்மை | 100,000 | 2014.03.28 | 100,000<br>2016.10.20 |
| 05. கண்டி | தெல்தெனியா | டபிள்யூ.ஜீ.குணதாச இல.09 கொடமாவின் வெவேகம, ரஜவெல்ல | | 100,000 | 2016.02.05 | 100,000<br>2017.03.24 |
| 06.முல்லைத்தீவு | வெலி ஓயா | எச்.பீ.ஹேலாம்திரான | மந்த புத்தி | 100,000 | 2015.02.08 | 100,000<br>2017.06.21 |
| 07.ஹம்பாந்தோட்டை | அம்பலாந்தோட்டை | ஜீ.ஆர்.ரஞ்ஜித் பிரியன்த கனேயாய வீதி ருகுணு ரீதீகம | சரீர உபாதை | 100,000 | 2016.03.12 | 100,000<br>2016.10.17 |
| | வலஸ்முல்ல | எம்.பீ.மதுரங்கக தர்மசிறி அமிலபெதும் தும்மல்கொட யஹலமுல்ல வலஸ்முல்ல | | 100,000 | 2016.11.12 | 100,000<br>2016.11.29 |
| | | | | | | 1650.000 |

=======

**இணைப்பு 7**

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 08 மாவட்டங்களில் வீடமைப்பு உதவி வழங்குதல்**

| **மாவட்டம்** | **2014** | **2015** | **2016** | **2017** | **2018** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 04 | 05 | 18 | 03 | 04 | 34 |
| திருகோணமலை | 06 | 07 | 05 | 02 | 01 | 21 |
| மட்டக்களப்பு | 19 | 08 | 25 | - | 01 | 53 |
| முல்லைத்தீவு | 02 | - | - | - | - | 02 |
| மன்னார் | - | 03 | 01 | - | - | 04 |
| யாழ்ப்பாணம் | 10 | 04 | 02 | - | 01 | 17 |
| | 41 | 27 | 51 | 05 | 07 | 131 |

கிளிநொச்சி 2014 தொடக்கம் 2018 வரை வழங்கப்படவில்லை.

வவுனியா 2014 தொடக்கம் 2018 வரை வழங்கப்படவில்லை.